

# மெய்யறம்

வ.உ. சிதம்பரம் பிள்ளை

# மெய்யறம்

வ. உ. சிதம்பரம்பிள்ளை

# மெய்யறம்

வ. உ. சிதம்பரம்பிள்ளை

வ. உ. சி. நூலகம்

பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள்

ஜி - 1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 14.

தொலைபேசி : 044 - 28476273 / 98404 44841

# மெய்யறம்

வ. உ. சிதம்பரம்பிள்ளை

வெளியீடு :

வ. உ. சி. நூலகம்
பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள்
ஜி-1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 14.
தொலைபேசி : 044 - 28476273

| First Edition : 2004 |

Published by : V. O. C. NOOLAGAM.
Publisher and Book-Sellers
G - 1. Lloyds Colony, Royapettah, Chennai - 600014.
Phone: 044 - 28476273

| No. of Pages : 64 |

| No. of Copies : 1000 | Size of the Book : 1/8 Demy |

| Paper used for text : 18.6 Maplitho | Printing Type : 11 Points |

| Typeset at : Thaiyal Graphic Solutions, Chennai - 14. |

| Printed at : Deva Offset, Chennai - 5. |

Price : Rs. 25/-

# மெய்யறம்

## சிறப்புப் பாயிரம்

மெய்யற மியற்றினோன் வையமோர் சிதம்பரம். 1
வள்ளுவ ரெல்லையிம் மறைக்கு மெல்லையாம். 2
மடியருங் கேட்கவோ ரடியால் யாத்தனன். 3
நுதலிய தறவழி முதனிலை யடைதல். 4
அறம்பொரு ளின்பம்வீ டடைதல் பயனே. 5
விரோதி கிருதுவில் விளம்பப் பெற்றது. 6
கண்ணனூ ரரங்மனை யெண்ணியாத் திடுகளம். 7
ஆன்றமா தேவ னகமரங் கேற்றிடம். 8
ஏழையுங் கற்குமா றியற்றப்பட்டது. 9
மெய்யற மென்றும் வையகத் துலாவுக. 10

சகஜாநந்தன்

## பாயிரம்

மெய்ப்பொரு ளருளான் மெய்யற மாகுக. 1
வள்ளுவர் மறையின் வழி நூன் மெய்யறம். 2
அறநூல் கற்றுரைத் தாற்றுவோ னுவல்வோன். 3
மேற்கோ ளாதியால் விளக்குத னுவறிறன். 4
மெய்யோ பொருளோ வேண்டுவோன் கொள்வோன். 5
கொளுந்திறன் கசடறக் கொண்டுநன் கொழுகல். 6
மெய்யறம் பொருளோடு மெய்யருள் சேர்க்கும். 7
பொய்யறம் புணர்ந்ததாற் புரிந்தனன்மெய்யறம். 8
பொய்யற மொழிந்திவண் மெய்யற நிலவுக. 9
மெய்யறஞ் செய்துயிர் மெய்ப்பொரு ளாகுக. 10

# மாணவரியல்

## முதல் அதிகாரம் - மாணவர் கடமை

மாண் பெற முயல்பவர் மாணவ ராவர். 1

ஆணும் பெண்ணு மதுசெய வுரியர். 2

இளமைப் பருவ மியைந்த ததற்கே. 3

மற்றைய பருவமும் வரைநிலை யிலவே. 4

அவர்கடன் விதியிய லறிந்துநன் றாற்றல். 5

அன்னைதந் தையரை யாதியைத் தொழுதல். 6

தீயினம்விலக்கி நல்லிஞ் சேர்தல். 7

தக்கவா சிரியராற் றன்னிய லறிதல். 8

ஒழுக்கமுங் கல்வியு மொருங்குகைக் கொள்ளல். 9

இறைவ னிலையினை யெய்திட முயறல். 10

## 2 -ஆம் அதிகாரம்- விதியியல் அறிதல்

வினையின் விளைவே விதியென வந்துறும். 11

விதிசெய் கர்த்தா வினைசெய் யுயிரே. 12

மெய்ப்பொருள் வினையை விளைத்துயிர்க்கீயும். 13

தீவினை விளைவிற் சேருவ துன்பம். 14

நல்வினை விளைவி னணுகுவ வின்பம். 15

தீவிதி வரவைச் செப்பு மடன்மடி.. 16

நல்விதி வரவை நவிலுமறி வூக்கம். 17

விதியை மாற்றிட வினையை மாற்றுக. 18

தீவிதி வேண்டிற் றீவினை புரிக. 19

நல்விதி வேண்டி னல்வினை புரிக. 20

## 3 -ஆம் அதிகாரம்- தாய்தந்தையரைத் தொழுதல்

| | |
|---|---|
| தாயுந் தந்தையுந் தம் முதற் றெய்வம். | 21 |
| அவரிற் பெரியர் யாருமிங் கிலரே. | 22 |
| அவரடி முப்பொழு தநுதினந் தொழுக. | 23 |
| அவர்பணி யெல்லா மன்பொடுசெய்க. | 24 |
| அவருரை யெல்லா மறிந்துளங் கொள்க. | 25 |
| அவர் பொருள் செய்தற் காந்துணை புரிக. | 26 |
| அவர்நட் பெல்லா மவர் போற் கொள்ளுக. | 27 |
| அவர்பகை யெல்லா மவர்போற் றள்ளுக. | 28 |
| அவர்பெயர் விளங்கிட வறிந்தமைந் தொழுகுக. | 29 |
| இல்வாழ் வரசிற் கியைந்தவ ராகுக. | 30 |

## 4 -ஆம் அதிகாரம்- மெய்யைத் தொழுதல்

| | |
|---|---|
| மெய்யுல கெல்லாஞ் செய்முதற் கடவுள். | 31 |
| உலகப் பொருட்கெலா முயிரென நிற்பது. | 32 |
| அறிவா யெங்கணுஞ் செறிவா யமைந்தது. | 33 |
| பகுத்தறி யுயிர்வினைப் பயனதற் களிப்பது . | 34 |
| உலகந்த தனதரு ணலனுற வாள்வது. | 35 |
| தொழுமுறை யதனைமுப் பொழுது முள்ளல். | 36 |
| உள்ளியாங் குறங்கி யுள்ளியாங் கெழுதல். | 37 |
| எம்மதக் கடவுளுந் தம்ம தெனக்கொளல். | 38 |
| உலகி லதனடு வோர்ந்து நிற்றல். | 39 |
| அந்தண ராகி யதனிலை யடைதல். | 40 |

## 5 -ஆம் அதிகாரம்- தீயினம் விலக்கல்

| | |
|---|---|
| தீதெலாந் தருவது தீயினத்தொடர்பே. | 41 |
| தீயவர் நல்லுயிர் சிதைக்குங் கொடியர். | 42 |
| பிறர்பொருள் வவ்வும் பேதை மாக்கள். | 43 |
| துணைவரல் லாரை யணையுமா வினத்தர். | 44 |
| அறிவினை மயக்குவ வருந்து மூடர். | 45 |
| புரைவளர் பொய்ம்மை புகலுந் தீயர். | 46 |
| அறனோ பொருளோ வழிக்குங் கயவர். | 47 |
| பகவின் செயலைப் பதியின தென்போர். | 48 |
| இத்திறத் தாரோ டிணங்கி நிற்போர். | 49 |
| தீயின மெல்லா நோயென விலக்குக. | 50 |

## 6 -ஆம் அதிகாரம்- நல்லினஞ் சேர்தல்

நன்றெலாந் தருவது நல்லினத் தொடர்பே. 51
நல்லவர்மெய்ந்நிலை நண்ணி நிற்போர். 52
அகத்துற வுற்றுமெய் யறிந்து நிற்போர். 53
தவமு மொழுக்கமுந் தாங்கி நிற்போர். 54
நன்னினைப் புரைசெயன் மன்னி நிற்போர். 55
உலகிய லெல்லா முணர்ந்து நிற்போர். 56
அறனோ பொருளோ வாக்கி நிற்போர். 57
பசுவினைப் பயன்பதி பயக்கு மென்போர். 58
இத்திறத் தாரோ டிணங்கி நிற்போர். 59
தினமு நல்லினந் தெரிந்துசேர்ந் திடுக. 60

## 7 -ஆம் அதிகாரம்- ஆசிரியரை அடைதல்

அறிவினைத் தருபவ ராமா சிரியர். 61
இருபா லாருந் தருவதற் குரியவர். 62
அறிவு வகையா னாசிரி யர் பலர். 63
எவர்க்கு மொழுக்க மின்றியமை யாதது. 64
அவர் கடன் மாணவ ரறிதிற னறிதல். 65
நல்வினை விரும்பு நல்லவர்க் கோடல். 66
மாணவர் தமைதம் மகாரெனப் பேணல். 67
அறிந்தவை யெல்லாஞ் செறிந்திடச் சொல்லல். 68
சொல்லிய செய்யவும்வல்லுந ராக்குதல். 69
அறிந்தா சிரியரை யடைந்தெலா மறிக. 70

## 8 -ஆம் அதிகாரம்- தன்னையறிதல்

தன்னை யறித றலைப்படுங் கல்வி. 71
மனிதரி லுடம்பு மனமான் மாவுள. 72
தோன்முதற் பலவின் றொகுதிகா ளுடம்பு. 73
உடம்பெலா நிற்கு முயரறி வுரன்மனம். 74
உடம்பு மனமுமா ளுயரறி வான்மா. 75
ஆன்மா மனமுட றான்றன் வலிதனு. 76
மெய்ம்முத லியமனம் வெளிச்செலும் வாயில். 77
உடன்மனத் தின்பி னோடு மியலது. 78
மனமற வறநெறி மருவு மியலது. 79
ஆன்மா மனத்தை யறநெறி யுய்ப்பது. 80

## 9 -ஆம் அதிகாரம்- மனத்தை யாளுதல்

*மனமுத் தொழில்செயு மாபெருஞ் சத்தி.* 81
*நினைக்குந் தொழிலை நிதமுஞ் செய்வது.* 82
*அறனு மறனு மறிதிற னிலாதது.* 83
*அதனெறி விடுப்பி னழிவுடன் கொணரும்.* 84
*அதனெறி விடாதுஅ தாளுத றன்கடன்.* 85
*தானதிற் பிரிந்து சந்தத நிற்க.* 86
*எதையது நினைத்ததோ வதையுடன் காண்க.* 87
*மறமெனில் விலக்குக வறமெனிற் செலுத்துக.* 88
*பயனில வெண்ணிற் பயனதிற் றிருப்புக.* 89
*ஒன்றெணும் பொழுதுமற் றொன்றெண விடற்க.* 90

## 10 -ஆம் அதிகாரம் -உடம்பை வளர்த்தல்

*உடம்பெலாஞ் செய்யு மொப்பிலாக் கருவி.* 91
*உடம்பை வளர்த்தலஃ துரமுறச்செய்தல்.* 92
*உடம்புநல் லுரமுறி னுலகெலா மெய்தும்.* 93
*உரனிலா வுடம்பு வரனிலா மங்கை.* 94
*உளந்தொழில் செயற்கு முடலுரம் வேண்டும்.* 95
*வலியன வீரதி லளவி னுறுச்செயல்.* 96
*மாறுபா டிலான்வூண் மறுத்துமுப் பொழுதுணல்.* 97
*சிலம்பமெய்ப் பயிற்சிக டினந்தொறுஞ் செய்க.* 98
*பிணியுறி னுடன்பல தீர்த்தான் மருந்துணல்.* 99
*நினைந்த படியுடல் வளைந்திட வளர்க்க.* 100

## 11 -ஆம் அதிகாரம் - கொலை விலக்கல்

*கொலையுயிர் தனையத னிலையினின் றொழித்தல்.* 101
*வாழு முயிர்நிதம் வருந்த வதைத்தல்.* 102
*அச்செய றூண்டுத லச்செயற் குதவுதல்.* 103
*இயலு மிடத்தச் செயலைத் தடாமை.* 104
*படுமுயி ரறிவுபோற் படிப்படி கொடிததாம்.* 105
*கொலைபா தகங்களுட் டலையாய தென்ப.* 106
*அதுபல பிறப்பினு மருந்துயர் விளைக்கும்.* 107
*தொழுநோய் வறுமையோ டழுநோய் பெருக்கும்.* 108
*கொலைபுரி வார்க்கிங் கிலைபதியருளே.* 109
*கொலையினை விலக்கினார்க் கூற்றமும் விலக்கும்.* 110

## 12 -ஆம் அதிகாரம்- புலால் விலக்கல்

புலால்புழு வரித்தபுண் ணலால்வே றியாதோ? 111
புண்ணைத் தொடாதவர் புலாலையுட் கொள்வதென்? 112
அதுவலி தருமெனின் யானையஃ துண்டதோ? 113
அரிவலி பெரிதெனி னதுநமக் காமோ? 114
அன்றியும் வலியோ வறிவோ சிறந்தது? 115
வலியோ டறிவினை மக்களுன் றராதுகொல்? 116
மக்களு னுணாது மறிமுத லுண்பதென்? 117
பொறியறி விலார்க்கு மறிமுதற் றாழ்ந்தவோ? 118
அவைகொன் றுண்பார்க் கருளுண் டாமோ? 119
அருளிலா ரருண்மயப் பொருணிலை யடைவரோ? 120

## 13 -ஆம் அதிகாரம்- களவு விலக்கல்

களவுடை யவர்தரா துளமொடொன் றெடுத்தல். 121
வஞ்சித் துக்கொளல் வாங்கிக் கொடாமை. 122
களவினை யேவுதல் களவிற்குதவுதல். 123
தடுக்கக் கூடிய விடத்ததைத் தடாமை. 124
உடையவர் நலத்தையொத் துருக்கொளு மிம்மறம். 125
களவினைக் கள்ளரு மெள்ளுவர் பிறர்முன். 126
கள்ளுநர் தடுப்பவர்க் கொல்லவும் துணிவர். 127
கள்ளுந ருடையாற் கொல்லவும் படுவர். 128
களவினாற் பலபிறப் பளவிலா வறுமையாம். 129
களவினை விலக்கினார்க் களவிலாச் செல்வமாம். 130

## 14 -ஆம் அதிகாரம்- சூது விலக்கல்

சூதுவஞ் சனையதற் கேதுவாங் கருவி. 131
பந்தயங் குறிக்கும் பலவிளை யாடல். 132
அதுபொரு டருதல்போ லனைத்தையும் போக்கும். 133
உற்றவூ ணுடைமுதல் விற்றிடச் செய்யும். 134
பொறையு மறிவும் புகழுங் கெடுக்கும். 135
சூதர்தஞ் சேர்க்கையாற் சூதுகைப் புக்கிடும். 136
சூதரா தியரைத் தூர நிறுத்துக. 137
காலங் கழித்திடக் கவறுகை யெடுப்பர். 138
அதனினு மாலமுண் டழிதனன் றென்க. 139
கவறுருள் களத்தைக் கனவினுங் கருதேல். 140

## 15 -ஆம் அதிகாரம்- இரவு விலக்கல்

இரவெனப் படுபிறர் தரவொன் றேற்றல். 141
இரவினிற் றாழ்ந்தொன் றிலையென் மொழிப. 142
இரவினிற் களவு மேற்றமா மென்ப. 143
இரந்திடப் படைத்தவன் பரந்தழி கென்ப. 144
இரந்துயிர் வாழ்தலி னிறத்தனன் றென்ப. 145
அவருரை யெல்லா மறியா வுண்மை. 146
இரந்துயிர் வாழ்தலிங் கிழிவினு ளிழிவே. 147
தமக்குவாழ் வாரதிற் சாதலு நன்றாம். 148
பிறர்க்குவாழ் வாரதாற் பிழைத்தலு நன்றாம். 149
அவரு மதைவிடி னரும்பெருஞ் சிறப்பாம். 150

## 16 -ஆம் அதிகாரம்- மயக்குவ விலக்கல்

மயக்குவ வறிவினை மயக்கும் பொருள்கள். 151
அவ்வகள் கஞ்சா வபின்முத லாயின. 152
அறிவுதம் முயிரே யாதியே யுலகே. 153
அறிவினை மயக்குத லவற்றை யழித்தலே. 154
அறிவினை மயக்குவா ரருமறம் புரிவர். 155
மயக்குவ சிலபிணி மாய்க்குமென் றுன்பர். 156
மயக்காத வுண்டவை மாய்த்தலே யுத்தமம். 157
மயக்குவ வலியினை வழங்குமென் றுன்பர். 158
வலியினை வழங்கல்போல் வலியெலாந் தொலைக்கும். 159
ஆதலான் மயக்குவ வற்பமுங் கொண்டிடேல். 160

## 17 -ஆம் அதிகாரம்- பொய்ம்மை விலக்கல்

நிகழா ததனை நிகழ்த்துதல் பொய்ம்மை. 161
நிகழ்வதை யங்ஙன நிகழ்த்துதல் வாய்மை. 162
தீமையைத் தருமெனின் வாய்மையும் பொய்ம்மையாம். 163
புரைதீர் நலந்தரின் பொய்ம்மையும் வாய்மையாம். 164
வாய்மையைத் தருவதே வாயென வறிக. 165
மற்றவை யெலாம்வெறும் வாயிலென் றறிக. 166
வாய்மை யகத்தது தூய்மையை வளர்க்கும். 167
பொய்ம்மை யகத்தது புரையினை வளர்க்கும். 168
பொய்ம்மையை யாள்பவர் புன்னர காழ்வர். 169
பொய்ம்மை யொரீஇயவர் புகழ்வீ டடைவர். 170

## 18 -ஆம் - அதிகாரம்- புறஞ்சொல்லல் விலக்கல்

புறஞ்சொலல் பிறரைப் புறத்திழித் துரைத்தல். 171
அறங்கொலு மறத்திற் புறஞ்சொலல் கொடிது. 172
புறஞ்சொலல் பொய்முதற் புரையெலாம் வளர்க்கும். 173
புறஞ்சொலல் புறனெலாம் பொருபகை யாக்கும். 174
புன்மகார் செயல்களுட் புறஞ்சொல லொன்று. 175
புறஞ்சொலு நாவின ரறஞ்சொலல் வஞ்சம். 176
புறஞ்சொலு நாவினர்க் கறஞ்சொலல் மடமை. 177
புறஞ்சொலல் கேட்டலும் புன்மையென் றறிக. 178
புறஞ்சொலி வாழ்தலிற் பொன்றலன் றென்ப. 179
ஆதலால் புறஞ்சொல லடியொடு விடுக. 180

## 19 -ஆம் அதிகாரம்- பயனில் சொல் விலக்கல்

பயனில்சொல் யார்க்கும் பயன்றாரச் சொல்லலே. 181
அறியா மையினின் றச்சொல் பிறக்கும். 182
அறியா மையினை யச்சொல் வளர்க்கும். 183
அறிவினர் நட்பெலா மச்சொல் குறைக்கும். 184
அறிவிலார் நட்பினை யச்சொல் பெருக்கும். 185
பயனுள சொல்லினைச்சொலவிடா தச்சொல். 186
பயனுள செயலினைச் செயவிடா தச்சொல். 187
பயனில சொல்லுவர் நயனுறா ரென்றும். 188
பயனில சொல்பவர் பதடியென் றறைப. 189
பயனில விலக்கிப் பயனுள சொல்லுக. 190

## 20 -ஆம் அதிகாரம்- அழுக்கா றொழித்தல்

அழுக்கா றயலா ராக்கத்திற் புழுங்கல். 191
அழுக்கா றுறலினோ ரிழுக்கா றிலதே. 192
அழுக்கா றதுபோ லழிப்பதொன் றின்றே. 193
அழுக்கா றுளவரை யொழுக்கா றிலையே. 194
அழுக்கா றுடையார்க் காக்கமின் றாகும். 195
வறுமையும் பசியுஞ் சிறுமையு முளவாம். 196
அழுக்கா றுடைமைகீழ் வழுக்கா றென்ப. 197
விலங்குளு மழுக்கா றிலங்குத லில்லை. 198
அறிவுடை மக்க ளதுகொளல் புதுமை. 199
அழுக்கா றுளத்துறா தநுதின மோம்புக. 200

## 21 -ஆம் அதிகாரம்- தொழில் அறிதல்

எண்ணெனப் படுவ தெண்ணுநற் கணிதம். 201
எழுத்தெனப் படுவ திலக்கிய மிலக்கணம். 202
எண்ணு மெழுத்துங் கண்ணென மொழிப. 203
எண்ணறி யார்பொரு ளெய்துத லரிது. 204
எழுத்தறி யார்பிற வெய்துத லரிது. 205
எண்ணெழுத் தறிந்தா ரெய்துவர் நான்கும். 206
எண்ணு மெழுத்து மிடைவிடா தாள்க. 207
அவைதாய் மொழிகொளி னதைமுன் பறிக. 208
பின்பவை மிக்குள பிறமொழி யறிக. 209
அறிவதைக் கசடற வறிந்துகொண் டொழுகுக. 210

## 22 -ஆம் அதிகாரம்- தொழில் அறிதல்

மெய்யுறுப் புக்கொடு செய்வது தொழிலே. 211
தொழிலா லுலகந் தோன்றிநிற் கின்றது. 212
தொழிலிலை யெனிலுல கழிவது திண்ணம். 213
தொழிலிலார் வறுமையுற் றிழிவெலா மடைவர். 214
அரியநற் றொழில்சில வறிதல்யார்க் குங்கடன். 215
படைக்கல மனைத்தும் பண்பொடு பயில்க. 216
படைவகுத் தமர்செயு நடையெலாமறிக. 217
புவிகடல் விண்மிசை போவலூர்ந் தறிக. 218
எவ்வகை யுருவு மெடுத்திடப் பழகுக. 219
உழவுவா ணிகங்கைத் தொழில்சில வறிக. 220

## 23 -ஆம் அதிகாரம்- திருந்தச் செய்தல்

திருந்தச் செயலியல் பொருந்தச் செய்தல். 221
அழகு நிறைவு மமைவுறச் செய்தல். 222
திருந்தச் செய்தலே செய்தற் கிலக்கணம். 223
திருந்தச் செயல்பல சீர்களைக் கொணரும். 224
திருத்தமில் செயலாற் சீர்பல நீங்கும். 225
சிறுதொழி லெனினுந் திருந்தவே செய்க. 226
சிறுதொழிற் றொகுதியே பெருந் தொழிலாவது. 227
செய்யும் தொழிலிலே சிந்தையைச் செலுத்துக. 228
தொழிலினைக் கியமாய்த் துரிதமாச் செய்க. 229
பிறர்செய் தொழிற்குப் பின்னிடா வகைசெயல். 230

## 24 -ஆம் அதிகாரம்- நன்றியறிதல்

நன்றியென் பதுபிறர் நல்கிடு முதவி. 231
உறவினர் முதவியோ ருதவுதல் கடனே. 232
பிறர்செயு முதவியிற் பெரிதொன் றின்றே. 233
உதவியிற் சிறந்த துற்றுழி யுதவல். 234
உயர்ந்தது கைம்மா றுகவா துதவல். 235
அறிதலெஞ் ஞான்று மதைநினைந் தொழுகல். 236
உதவியோர் குடியெலா முயர்வுற வுள்ளல். 237
உதவியோர் றறவுரை யுடனிறை வேற்றல். 238
உதவியோர் மிகைசெயி னுடனதை மறத்தல். 239
அறிதற் களவுண் டுதவி சொலக்கெடும். 240

## 25 -ஆம் அதிகாரம்- நடுவு நிலைமை

நடுவு நிலைமைதன் னடுவு னிற்றல். 241
பிறவுயிர் நடுவள வுறனடு வின்மை. 242
நடுவறப் பொருளி னடுநிற் கும்பொருள். 243
அறனெலா நிற்பதற் கஃதா தாரம். 244
அதுசிறி தசையி னறனெலா மழியும். 245
நடுவினு ணிற்பவர் நலனெலாம் பெறுவர். 246
நடுவினை விடாரை நானிலம் விடாது. 247
நடுவிகந் தாருடன் கெடுவது திண்ணம். 248
நடுவிகந் தாரை நரகமும் விடாது. 249
ஆதலா னடுவி லசையாது நிற்க. 250

## 26 -ஆம் அதிகாரம்- அடக்க முடைமை.

அடக்க மனம்புலத் தணுகா தடக்கல். 251
அறிவினர்க் கென்று மடங்கி யொழுகல். 252
அடக்கநன் னெறியி னடக்கச் செய்யும். 253
அடக்கமில் லாமை யதைக்கடக் கச் செய்யும். 254
அடக்கம் பல்வகை யாக்கமுந் தருமே. 255
அடக்க மிலாமை யழிவெலாந் தருமே. 256
அடக்கமெய் வீட்டில் கடிப்படி யாகும் . 257
அப்படி யேறினா ரடைவரவ் வீடு. 258
அப்படி யேறா ராழ்வர்வெந் நரகு. 259
ஆதலா வடக்க மநுதின மோம்புக. 260

## 27 -ஆம் அதிகாரம் -ஒழுக்க முடைமை

ஒழுக்க மென்ப துயர்ந்தோர் நடையே. 261

அருளறி வமைந்தவை யாள்பவ ருயர்ந்தோர். 262

அவர்நடை பெரியோர்க் கடங்கி யொழுகல். 263

இருக்கை யெழுத லெதிர்பின் செல்லல் . 264

நினைவுஞ் சொல்லும் வினையுமொன் றாக்கல். 265

மறநெறி விலக்கி யறநெறி செல்லல். 266

தானுற வேண்டுவ வேனோர்க் களித்தல். 267

தன்னுயிர் போல மன்னுயிர்ப் பேணல். 268

பகைசெய் தவரொடு நகைசெய் தளாவல். 269

உயிரெலா மெய்யென வோர்ந்தவை யோம்பல். 270

## 28 -ஆம் அதிகாரம் -அறிவுடைமை

அறிவு மறமொரீஇ யறத்தின்பா லுய்ப்பது. 271

அறிவெஞ் ஞான்று மற்றங் காப்பது. 272

அறிவு பகைவரா லழிக்கப் படாதது. 273

அறிவினை யுடையா ரனைத்து முடையர். 274

அறிவில் லாதார் யாதுமில் லாதார். 275

அறிவிற் கறிகுறி யாவன செய்தல். 276

எளியவாச் செலவுரைத் தரியவை யுணர்தல். 277

பாவம் பழிக்குப் பயந்தில வொழுகல். 278

உலகினோ டென்று மொத்து நடத்தல். 279

எதிரதாக் காத்தெவ் வின்பமு மடைதல். 280

## 29 -ஆம் அதிகாரம்- ஊக்க முடைமை

ஊக்க முயர்வுற வுனுமன வெழுச்சி. 281

ஊக்க முடைமை யுலகெலாங் கொணரும். 282

ஊக்க மிலாமை யுடையவும் போக்கும். 283

ஊக்க முடையா ருயர்ந்தோ ராவர். 284

ஊக்க மிலாதா ருயிர்க்கும் பிணங்கள். 285

உயர்ந்தவை யெவையோ வவையெலா முள்ளுக. 286

அவற்றினு ளொன்றை யடைந்திட விரும்புக. 287

அதனை யடையு மாறெலா மெண்ணுக. 288

ஒவ்வொன் றினுமுறு மூலெறா மெண்ணுக. 289

ஊறொழித் ததையுறு முபாயமுங் கருதுக. 290

## 30 -ஆம் அதிகாரம்- முயற்சியுடைமை

உயர்வுற வுழைக்கு முடற்றொழில் முயற்சி. 291
முயற்சி பலவகை யுயர்ச்சி நல்கும். 292
முயற்சி யூழையு முதுகிடச் செய்யும். 293
முயற்சி யுடையார் மூவுல காள்வர். 294
முயற்சி யிலாதா ரிகழ்ச்சி யடைவர். 295
ஊக்கிய வொன்றனை யுடன்கொளத் துணிக. 296
அதிக வூறாநல் லாற்றின் முயல்க. 297
உறுமு றொழித்தறி வுரங்கொடு தொடர்க. 298
தவறினுந் தாழ்ப்பினுந் தளர்ச்சியெய் தற்க. 299
முயற்சியின் விரிமுத னூலினு ணறிக. 300

## மாணவரியல் முற்றிற்று

# அரசியல்

## ௩௨

### 31 -ஆம் அதிகாரம்- இல்வாழ்வியல் வுயர்வு

இல்வாழ் வென்பதோ ரில்லினல் வாழ்தல். 301
எதிர்பாற் றுணையுடன் வதிதன் மிகநலம். 302
இல்வாழ் வார் கட னில்லற மியற்றல். 303
என்றும்வே ளாண்மை யியற்றலே யில்லறம். 304
இல்வாழ் வில்லெனி லில்லையிவ் வுலகே. 305
இன்னிலை யெவற்றினு நன்னிலை யென்ப. 306
எந்நிலை யவர்க்கு மில்வாழ் வார்துணை. 307
அந்நிலைப் பெருக்கே யரசென வறிக. 308
அதற்கா நன்முத லன்பெனும் பொருளே. 309
அதிலாம் பயன்க ளறமுத லாவ்கே. 310

### 32 -ஆம் அதிகாரம்- இல் லமைத்தல்

அகல நீள மரைக்கான் மைல்கொளல். 311
ஈரிரு புறமதி லெதிரெதிர் வழிசெயல். 312
மத்தியிற் புறமதின் மட்டமே லிற்செயல். 313
இல்லிற் கீரா யிரமடி சதுரமாம். 314
நிலமேன் மதிற்கு நேர்கால் கீழ்செயல். 315
வளியன னீர்மா வழியா வகைசெயல். 316
வளியொளி யளவினுள் வரச்செல வழிசெயல். 317
பொருட்குஞ் செயற்கும் பொருத்தமாப் பகுத்திடல். 318
நிலவறை தான்செய விதிமிகின் மேற்செயல். 319
நற்றரு செடிகொடி யிற்புறத் தமைத்திடல். 320

## 33 -ஆம் அதிகாரம் -உயிர்த்துணை கொள்ளல்

உயிர்த்துணை தன்னுயிரக் குதவெதிர் பாற்றுணை. 321
அத்துணைக் கெங்கணு மொத்ததொன் றிலதே. 322
ஆக்கமுங் கேடு மத்துணை யாலாம். 323
கொள்ளு மறிவெலாங் கொண்டுபின் றுணைகொளல். 324
கொளுமுன் கொண்டிடிற் குற்றம் பலவாம். 325
துணையிழந் தாரை மணப்பது புண்ணியம். 326
விரும்பா தவரை விரும்புதல் பாவம். 327
துணைநலங் குடிமையே தூய்மையே யொழுக்கமே. 328
பருவமே யெழிலே பண்பே யின்சொலே. 329
வரவினுள் வாழ்தலே மடிதுயி லிலாமையே. 330

## 34 -ஆம் அதிகாரம்- உயிர்த்துணை யாளுதல்

இருவரு ளறிவிற் பெரியவ ராள்க. 331
ஆண்பா லுயர்வெனல் வீண்பேச் சென்க. 332
துணைநன் காள்பவர் தொல்லுல காள்வர். 333
தன்னுயி ருடல்பொரு டன்றுணைக் குரியன. 334
தன்றுணை யுயிர்முத றனக்காங் குரியன. 335
இருவராத் தோன்றினு மொருவரே யுள்ளின். 336
தானறிந் தவையெலாந் தன்றுணைக் குணர்த்துக. 337
தனதுநன் னெறிதுணை சார்ந்திடச்செய்க. 338
இயற்றுவ துணையுட னெண்ணி யியற்றுக. 339
உண்பன துணையோ டுடனிருந் துண்ணுக. 340

## 35 -ஆம் அதிகாரம் -இன்பந் துய்த்தல்

துணையோ டின்பந் துய்த்தலே சுவர்க்கம். 341
துய்க்கு முறையெலாந் தொல்லகப் பொருள் சொலும். 342
முறையறி யாதுறல் குறையறி வுயிர்செயல். 343
தன்றுணைக் கின்பந் தரத்தரத் தனக்கதாம். 344
தானின் புறவெணிற் றனக்கதெய் தாதே. 345
ஊட லுணர்தல் புணர்த லலதன்வகை. 346
ஊட லிமித்த முடனுட னாக்குக. 347
இரந்தும் புணர்ந்து முணர்ந்திடச் செய்க. 348
இருந்திரங் கத்துணை பிரிந்திடல் நீக்குக. 349
துணையழத் துறந்துமெய் யினை தலன் பிலாவறம். 350

## 36 -ஆம் அதிகாரம்- காமம் விலக்கல்

*காம மகத்தெழு மாமத வெறியே.* 351
*இன்ப மறிவோ டிருந்தநு பவிப்பதே.* 352
*இராச்சில குறித்தறை யியைந்திட லின்பம்.* 353
*எண்ணிய பொழுதிடத் தியைந்திடல் காமம்.* 354
*காம மகப்புறக் கண்களைக் கெடுத்திடும்.* 355
*காம மெழுங்காற் கடவுளை யுள்ளுக.* 356
*அறிவெனுந் தோட்டியா லதனைக் காக்க.* 357
*அதைவளர்ப் பவைதமை யகத்தைவிட்டோட்டுக.* 358
*அதையடு மொன்றை யகத்தினுட் கொள்ளுக .* 359
*அதைநன் குள்ளி மதவெறி களைக.* 360

## 37 -ஆம் அதிகாரம்- பரத்தையை விலக்கல்

*பரத்தை யின்பினைப் பலர்க்கும் விற்பவள்.* 361
*மதுகூ திரண்டினும்பொதுமகள் கொடியள்.* 362
*அவளடை யுடைநோக் காதியா லழிப்பள்.* 363
*இன்பந் தருதல்போற் றுன்பெலாந் தருவள்.* 364
*உடைமுதற் பொருளெலா முயிரொடு கவர்வள்.* 365
*அவளினும் வஞ்சக ரவனியி லில்லை.* 366
*அவளினுங் கள்வ ரருளின ரெனலாம்.* 367
*அவளுள நினைந்தாற் றவசியுங் கெடுவன்.* 368
*அவளா லந்தோ வழிந்தவ ரநேகர்.* 369
*அவளிலாநாடே யழிவுறா நாடு.* 370

## 38 -ஆம் அதிகாரம்- பரத்தனை விலக்கல்

*தன்றுணை யலாளைத் தழுவுவோன் பரத்தன்.* 371
*பரத்தை யினுமிகக் கொடியவன் பரத்தன்.* 372
*பொதுமக ளாதலம் முழுமக னாலே.* 373
*நன்மகன்கெடுதலப் புன்மக னாலே.* 374
*மறனெலா நிகழ்வதம் மாபாவி யாலே.* 375
*அவனைக் காண்டலா லழியும் புகழே.* 376
*அவனொடு பேசலா லழியு நிறையே.* 377
*அவனோடு சேர்தலா லழியு மனைத்தும்.* 378
*அவனிலா நாடெ யாகுநன் னாடு.* 379
*அறனு மளியு மமைவுறு நாடு.* 380

## 39-ஆம் அதிகாரம்- சிற்றினம் விலக்கல்

| | |
|---|---|
| சிற்றினங் குணத்திற் குற்றமிகு மாக்கள். | 381 |
| பெருமிதந் தன்னைப் பேணா மாக்கள். | 382 |
| அற்பத் தன்மை யளாவிய மாக்கள். | 383 |
| பொறியின் பங்களிற் செறிவுறு மாக்கள். | 384 |
| சுயநயங் கருதும் பயனிலா மாக்கள். | 385 |
| சிற்றினம் பொருளையுஞ் சீரையு மழிக்கும். | 386 |
| அற்றமுங் குற்றமு முற்றிடச் செய்யும். | 387 |
| முற்றவ நலத்தொடு கற்றவுஞ் சிதைக்கும். | 388 |
| நரகும் பழியு நண்ணிடச் செய்யும். | 389 |
| சிற்றின்ப பற்றினைச் சிறிதும் வேண்டல். | 390 |

## 40 -ஆம் அதிகாரம்- பெரியாரைத் துணைக்கொளல்

| | |
|---|---|
| பெரியா ரரியன பெரியன செய்பவர். | 391 |
| பொறியா ளுளத்தை யறிவா லாள்பவர். | 392 |
| இகபர வியலெலா மெண்ணிநன் கறிந்தவர். | 393 |
| நல்வினை வியலெலா நண்ணி நிற்பவர். | 394 |
| பின்னுறுந் தீங்கெலா முன்னறிந் தொழிப்பவர். | 395 |
| அவரது துணைகொள லரும்பெருங் காப்பு. | 396 |
| அவரை யறிந்துகொண் டநுதின மோம்புக. | 397 |
| அவர்க்குரி யனவெலா மன்பொடு வழங்குக. | 398 |
| அவரோ டெண்ணியே யனைத்துஞ் செய்க. | 399 |
| அவருரை பிழையா தியாங்கணு மொழுகுக. | 400 |

## 41 -ஆம் அதிகாரம்- பேதமை யொழித்தல்

| | |
|---|---|
| பேதமை யேதங்கொண் டுதியம் விடுதல். | 401 |
| கடிந்தவை தம்பால் காதன்மை செய்தல். | 402 |
| நாணன் பருள்புகழ் பேணுத லின்மை. | 403 |
| அறிந்துணர்ந் துரைத்து மடங்கா தொழுகல். | 404 |
| அறத்தை விடுத்து மறத்தைப் புரிதல். | 405 |
| வினைசெயின் பொய்படும் புனைகொளும்பேதை . | 406 |
| தமர்பசித் துழலப் பிறர்க்கிடும்பேதை. | 407 |
| பேதையோர் காசுறிற் பித்தன் களித்தற்று. | 408 |
| அவைபுகிற் பேதை யதனலங் குன்றும். | 409 |
| பெரியார் நூல்கொடு பேதமை களைக. | 410 |

## 42 -ஆம் அதிகாரம்- வெண்மை யொழித்தல்

வெண்மை யறிவிலை விடுத்த தன்மை. 411
ஒண்மை யுடையமென் றுளத்தொடு செருக்கல். 412
ஈயவேண் டியவிடத் தீயா திவறல். 413
குற்றம் பலவுஞ் கற்றமாக் கொள்ளல். 414
கற்றில கற்றவாக் காட்டி நடித்தல். 415
அருமறை விடுத்துப் பெருமிறை கொள்ளல். 416
செய்வன சொல்லியுஞ் செய்யா திழுக்கல். 417
உலகின ருளதென்ப திலதென மறுத்தல். 418
இன்மையு ளின்மை வெண்மை யொன்றே. 419
ஒண்மை சானூல்கொடு வெண்மையைக் களைக. 420

## 43 -ஆம் அதிகாரம்- நெடுநீ ரொழித்தல்

நெடுநீர் கால நீள விடுதல். 421
ஒருகணச் செயலை மற்றொன்றற் கீதல். 422
நெடுநீர் குறைபல தருமியல் புடையது. 423
நெடுநீர் சிறிதுறி னடுமதூஉம் பெருகி. 424
நெடுநீ ரறவிடிற் படுபொரு ளாகும். 425
நெடுநீர் விடற்கந் நினைவையுட் கொள்ளுக. 426
நெடுநீ ரால்வருங் கெடுதியை யுள்ளுக. 427
எக்கணத் தெஃதுறு மக்கணத் ததைச்செயல். 428
உறுவ பெரிதென வுற்றதை வைத்திடேல். 429
உற்றதைச் செய்துபி னுறுவதை யெண்ணுக. 430

## 44 -ஆம் அதிகாரம் - மறவி யொழித்தல்

மறவிதன் கடமையை மனத்தினுன் னாமை. 431
மறவியூக் கத்தின் மறுதலை யாகும். 432
மறவி பலவகை யிறவையு நல்கும். 433
மறவியை யடுத்தவர் மாண்பெலா மிழப்பர். 434
மறவியை விடுத்தவர் மாநிலத் துயர்வர். 435
மறவியை விடற்கு மனத்தினன் குள்ளுக 436
காலையு மாலையுங் கடவுளைத் தொழுக. 437
மாணுயர் நூல்சில மனனஞ் செய்க. 438
விடிந்தபின் செய்பவை விடியுமு னுள்ளுக. 439
பகலிற் செய்தவை யிரவினன் காய்க. 440

## 45 -ஆம் அதிகாரம்- மடி யொழித்தல்

மடிதஞ் செயல்களின் மந்த முறுதல். 441
மடிமெய்ம் முயற்சியின் மறுதலை யாகும். 442
மடிதமை யொன்னார்க் கடிமைப் படுத்தும். 443
மடியினை யுடைவர் குடியொடு கெடுவர். 444
மடியினை விடுத்தவர் படியெலாங் கொள்வர். 445
மடியினை விடற்கு மனத்தினன் குள்ளுக. 446
காலைமெய்ப் பயிற்சி சோலைநீர்க் குளிகொளல். 447
இளம்பக லுணவரை யிராவுண வரைகொளல். 448
இரவினல் யாமத் தென்று முறங்குக. 449
பயனுள சிலசொற் பார்த்துப் பேசுக. 450

## 46 -ஆம் அதிகாரம்- துயி லொழித்தல்

உடம்புள வயர்வினை யொழிப்ப துறக்கம். 451
அவ்வயர் வளவிற் கதிகமா வதுதுயில். 452
சுழுத்தியா முறக்கஞ் சுகத்தை வளர்க்கும். 453
கனவுக ளாந்துயில் கவலையை வளர்க்கும். 454
துயில்கொள வழிவாந் துயில்விட வாக்கமாம் . 455
அயர்விற் கமையு மைம் மூன்று நாழிகை. 456
மற்றைய பொழுதெலா மாண்டொழில் புரிக . 457
தொழில் செயும் பொழுது துயில்வரி னுலாவுக . 458
கைத்தொழிலின் முதலிய மெய்த்தொழில் செய்க . 459
அவசிய மெனினுண வரையிலுஞ் சுருக்குக. 460

## 47 -ஆம் அதிகாரம் - செருக் கொழித்தல்

செருக்கென் பதுதன் பெருக்க தகங்கொளல். 461
அஃதறி யாமைமி னங்குர மென்ப. 462
ஆன்ம வுய்வினை யழிப்பதச் செருக்கு. 463
அடங்கா வுளத்தை யளிப்பதச்செருக்கு 464
அழிவு முடம்பை யளிப்பது மஃதே. 465
செருக்கினர் தம்மெய்த் திறத்தினைக் காணார். 466
தம்பகைத் திறத்தைத் தாழ்த்தியே யெண்ணுவர். 467
இன்பினு மடியினு மிறந்து படுவர். 468
துயிலு மறவியுந் தொடர்ந்து கொள்வர். 469
புகழெலாம் போக்கி யிகழெலா மீட்டுவர். 470

## 46 -ஆம் அதிகாரம்- அச்ச மொழித்தல்

அச்ச மனமுட லழிவுற நடுங்கல். 471
அஃதறி யாமையி னந்தமென் றுணர்க. 472
அறம்புகழ்செய்தலா லழியினும் வாழ்வாம். 473
மறம்பழி செய்தலால் வாழினு மழிவாம். 474
அறம்புகழ் செய்வதற் கஞ்சுதல் மறவே. 475
மறம்பழிக் கஞ்சுதன் மாண்புடை யறவே. 476
அறநெறி மறந்தரின் மறநெறி யாகும். 477
மறநெறி யறந்தரி னறநெறி யாகும். 478
அச்ச முடையார்க் கெச்சமிங் கில்லை. 479
அச்ச மிலார்க்கு நிச்சலு மெச்சமாம். 480

## 49 -ஆம் அதிகாரம்- இடுக்க ணழியாமை

இடுக்கண் டுயரினைக் கொடுக்குமிடை யூறு. 481
இடுக்க ணுற்றுழி நகினது தான் கெடும். 482
இடுக்க ணுக்குள நெகினது பெருகும். 483
இடுக்கண் புறத்துள தென்பது பொய்ம்மை. 484
இடுக்க ணகத்துள தென்பது மெய்ம்மை. 485
இடுக்க ணகத்ததென் றெண்ணவஃதழியும். 486
இடுக்கணி லழியா ரிடுக்க ணழியும். 487
இடுக்கண் வலியினைக்கொடுக்குந் திறத்தது. 488
இடுக்க ணறிவினை யியு மியலது. 489
இடுக்கணிற் றளரா ரெண்ணிய முடிப்பர். 490

## 50 -ஆம் அதிகாரம்- பற்றுளம் விடுதல்

பற்றுளம் பொருளினிற் பற்றுள நெஞ்சம். 491
ஈயா துன்னா தெண்ணிவைத் திவறல். 492
பற்றுள மரில்பல வற்றுளும் பெரிதும். 493
பற்றுளம் பல்வகைக் குற்றமு நல்கும். 494
பற்றுளத் தாலருஞ் சுற்றமு நீங்கும். 495
பற்றுளத் தார்பொருண் முற்று மிழப்பர். 496
அறம்புக ழின்ப மெய் யறிவுவீ டிழப்பர். 497
பற்றுளம் விடுத்தவர் பாரெலாங் கொள்வர். 498
அறம்புக ழின்ப மெய் யறிவுவீ டடைவர். 499
பற்றுளப் பேயினைச் செற்றுடன் றுரத்துக . 500

## 51 -ஆம் அதிகாரம்- தன்னைப் பேணல்

தன்னைப் பேணுத நல்முதற் கடமை. 501
தன்னைப்பேணார் தாழ்வே யடைவர். 502
தன்னைப் பேணுவோர் தலைமை யெய்துவர். 503
பேணல் பெருமை யெலாமுற முயறல். 504
உடல்பொருள் வினைபொழு திடனறிந் தின்புறல். 505
பொருளு மொழுக்கமும் புகழும் பெருக்கல். 506
உடம்போர் யானையி னூரமுற வளர்த்தல். 507
மனமுயர்ந் தவையெலாந் தினமுளப் பயிற்றல். 508
அறிவின் மலனொழித் தழுக்குறா தமைதல். 509
தன்னுயிர்த் துணையை தவைப்போ லாக்கல் 510

## 52 -ஆம் அதிகாரம்- உற்றாரைப் பேணல்

உற்றார் பெற்றா ருறவினர் பலருமே. 511
தன்னுற வினரெலாந் தன்றுணைக் கன்னர். 512
தன்றுணை யுறவினர் தனக்காங் கன்னர். 513
தாயுந் தந்தையுந் தான்றொழுந் தகையர். 514
அவரைப் பேணுத லரும்பெருங் கடனே. 515
சோதா ருற்றுழி யாதர வாவர். 516
அவரைப் பேணுத லாக்கம் பேணலே. 517
மற்றுளா ருந்தமைச் சுற்றுறப் பேணுக. 518
உற்றவர்ப்பேணிற் பற்றல ரொழிவர். 519
உற்றார் பெருகி னூரமிகப் பெருகும். 520

## 53 -ஆம் - அதிகாரம் -விருந்தினரைப் பேனல்

விருந்தினர் முன்னர்தெரிந்திலாப் புதியர். 521
விருந்தினர்ப் பேணுவார் பெருந்தகை யோரே. 522
விரந்தின ருண்ணலம் பொருந்திவர்க் கொள்க. 523
விருந்தினர்க் குணவுநன் மருந்தென வழங்குக. 524
உடையிடம் படுக்கை குடைகாப் புதவுக. 525
உளமறிந் தேனைய வளவறிந் தீக. 526
இன்ப மவருற வின்சொல் வழங்குக. 527
அவரறிந் தவையெலா மறிந்துளங் கொள்க. 528
அவருய ரொழுக்கெலா மறிந்துகைக் கொள்க. 529
செல்வுழி யுடன்சென் றுள்ளிடப் பிரிக. 530

## 54 -ஆம் அதிகாரம் -முன்னோரைப் பேணல்

முன்னோர் துஞ்சிய தன்னுற வினரே. 531
அவரைப் பேணலா லாம்பல நலமே. 532
அவரைப் பேணுமா றடிக்கடி யுள்ளல். 533
அவர் தொடங் கியவறந் தவறுறா தாற்றல். 534
அவர்செய வெண்ணிய வறங்களு மியற்றல். 535
அவர் நற் குணனெலா மறிந்துகைக் கொள்ளல். 536
அவர்நற் செயலெலா மழியாது நிறுத்தல். 537
அவர்நற் பெயர்தம தருமகார்க் களித்தல். 538
அவர்பெயர் விளங்கிட வறம்பல புரிதல். 539
அவர்க்குறும் பிறவு மன்பொடு செய்தல். 540

## 55 -ஆம் அதிகாரம் -புதல்வரைப் பேணல்

புதல்வரே தம்மருள்பொருளென மொழிப. 541
நன்றுசெய் புதல்வரா னரகறு மென்ப. 542
பொருளுங் குடியும் புகழுமா மவரால். 543
துணைதரும் புதல்வர்க் கிணைபிற ராகார். 544
பிறரைப் புதல்வராப் பெறுதலும் வழக்கே. 545
மிகமிக வருந்தியும் புதல்வரை வளர்க்க. 546
இளமையி னவர்நல் லினமுறச்செய்க. 547
தக்கவா சிரியரைச் சார்ந்திடச் செய்க. 548
கல்வியு மொழுக்கமுங் கைக்கொளச் செய்க. 549
இல்வாழ் வரசுற வல்லுந ராக்குக. 550

## 56 -ஆம் அதிகாரம்- அன்பு வளர்த்தல்

அன்பெனப் படுவ தகத்தி னுருக்கம். 551
ஆர்வல ரூறுறி னதுகண் ணீராம். 552
அவரூ றொழிக்குந் தவலிலா முயற்சியாம். 553
ஆருயிர் பெற்றதிங் கன்பு செய்தற்கே. 554
அன்புபா ராட்டற் காமிடந் தானே. 555
தன்னுயிர்த் துணையே தன்வரும் புதல்வரே. 556
தன்பெற் றோரே தன்சகோ தரரே. 557
தன்னா சிரியரே தன்னுற விவரே. 558
தன்னூ ராரே தன்வாட் டிவரே. 559
மனிதர் சமூகமே மன்னுயி ரனைத்துமே. 560

## 57 -ஆம் அதிகாரம்- பொறுமை கொள்ளல்

பொறுமை பிறர்மிகை பொறுக்கு நற்குணம். 561
தன்னலங் கெடுங்காற் சகிப்பது பொறுமை. 562
பொதுநலங் கெடுங்காற் பொறுப்பது பிழையே. 563
வறுமைப்பிணிக்குப் பொறுமைநன் மருந்தாம். 564
சிறுமையை வளர்ப்பது பொறுமையில் லாமை . 565
பொறுமையைக் கொண்டவர் புவியெலாங் கொள்வர். 566
பொறுமையை யிழந்தவர் புசிப்பவு மிழப்பர் . 567
ஒறுத்தார்க்கொருகணத் தொருசிறி தின்பமாம். 568
பொறுத்தார்க் கென்றும் பொன்றா வின்பமாம். 569
ஒறுத்தார் சிறியர் பொறுத்தார் பெரியர். 570

## 58 -ஆம் அதிகாரம்- ஒப்புர வொழுகல்

ஒப்புர வூரா ரொப்பு நன்னடை. 571
ஒப்புர வுயர்தர வொழுக்கத் தின்முதல். 572
ஒப்புர வொழுகுவார்க் குறவினர் பெருகுவர். 573
ஒப்புர விலாரை யொருவருந் தழுவார். 574
அறிஞரி னொப்புர வறவோர்க் குதவல். 575
துறந்தா ரிறந்தார் துவ்வார்க் குதவல். 576
ஊர்ப்பொது நன்மைக் குழைத்தெலாஞ் செய்தல். 577
ஊரார் நன்மை தீமைக் குதவல். 578
ஊரார் வேண்டுவ வுவந்துட னளித்தல். 579
ஊரா ராணைக் குட்பட் டொழுதல். 580

## 59 -ஆம் அதிகாரம் - ஈகை புரிதல்

இல்லார்க் கீவதே யீகை யென்ப. 581
மற்றையோர்க் கீதன் மாற்றிலா மடமை. 582
இல்லா ருள்ளு நல்லார்க் கீக. 583
பிறருக் கீதல் பிழையென வறிக . 584
மடையரே மடியரே பிணியரே யில்லார். 585
மடையர்க் கீக மதியெனு மொன்றே. 586
மடியர்க் கீக தொழிலெனு மொன்றே. 587
மற்றையோர்க் கீக மருந்தா னிடனே. 588
உடையவ ரீதற் குரிய ராவர். 589
ஈகை புகழ்சிறப் பெல்லா நல்கும். 590

## 60 -ஆம் அதிகாரம்- புகழ் செய்தல்

புகழுய ருலகம் புகலு நன்மொழி. 591
புகழ்செய் தவரே பொன்றாது நிற்பவர். 592
அறமுத லான்கு மாற்றிமெய் யடைந்தவர். 593
புகழ்செய் யாரே பொன்றி யொழிந்தவர். 594
நான்கி லொன்றையு நண்ணா திழிந்தவர். 595
மெய்ப்புகழ் தருவன மெய்யிய லடைதல். 596
உலக முழுவது மொருங்கர சாளுதல். 597
அறமுத லான்கு மறிந்துசெய் துரைத்தல். 598
உற்றவர்க்கெல்லா முடனுவந் துதவல். 599
இல்லார்க் கெல்லா மீந்து வாழ்தல். 600

## 61 -ஆம் அதிகாரம்- அரசியல் அரசு நலம்

அரசுயிர் கட்குச் சிரசென நிற்பது. 601
அதனலன் மாணவ ரருநல னாளுதல். 602
இல்வாழ வியலெலா மியைந்து நன்கொழுகல். 603
சுற்றம் பெருக்கல் சூழ்ச்சிபுரிதல். 604
தெரிந்து தெளிதல் செய்வினை யாளுதல். 605
ஒற்றுரை நூலமைச் சொருங்குட னாளுதல். 606
பெரியமன் னரைச் சார்ந் தரியவை பெறுதல். 607
நாடரண் பொருள்படை நட்பினி தாளுதல். 608
வினைத்திற னனைத்து நினைத்தறிந் தாற்றல். 609
முறைசெய் தறம்புரிந் திறையென நிற்றல். 610

## 62-ஆம் அதிகாரம்- சுற்றம் பெருக்கல்

சுற்றமென் பதுதனைச் சூழ விருப்பது. 611
சுற்றமு மறிவுபோ லற்றங் காக்கும். 612
சுற்ற மின்மை யற்றமுறு விக்கும். 613
சுற்ற முடையார் சூழ்வன முடிப்பர். 614
சுற்ற மிலார்க்குச் சூழ்ச்சியே யில்லை. 615
குற்றம் விடுதலாற் சுற்றுஞ் சுற்றம். 616
கொடையா லின் சொலாற் கூடிடுஞ் சுற்றம். 617
வாய்மையாற்பொறுமையாற் றூய்மையாஞ் சுற்றம். 618
கொள்ளல்கொடுத்தலாற் குலாவுறுஞ் சுற்றம். 619
உணர்ச்சி பழகலா  லுதவுஞ்சுற்றம். 620

## 63 -ஆம் அதிகாரம்- கண்ணோட்டம்

கண்ணோட்டஞ் சுற்றமேற் கண்ணோடி விழ்தல். 621
சுற்றங் கண்டுழிக் குற்றமறத்தல். 622
சுற்றங் கண்டுழி யுற்றன செய்தல். 623
கண்ணிற் கழகு கண்ணோட்ட மென்ப. 624
உளத்தொடு சேர்ந்தகண் ணோட்ட முயர்ந்தது. 625
தீவினை யாளர்பாற் றீதுகண் ணோட்டம். 626
கண்டுநஞ்சுணல்கரை கடந்த கண்ணோட்டம். 627
கருமங் கெடாவகை கண்ணோடல் நக்கது. 628
சிறுவர்பா லெனுபுறுஞ் சிறிதுகண் ணோடுக. 629
முறைசெயும் பொழுததை முற்றுமே விடுக. 630

## 64 -ஆம் அதிகாரம் - சூழ்ச்சி புரிதல்

இயற்றுவ தெல்லா மெண்ணியே யியற்றுக. 631
எண்ணா தியற்றுதல் கண்ணிலார் நடையாம். 632
இயற்றத் தொடங்கி யெண்ணுத லிழுக்காம். 633
இயற்றுமுன் செயலி னியல்பினை யாய்க. 634
அறமெனிற் சுற்றுறு மறிஞரோ டெண்ணுக. 635
வரவு செலவு வரும்பய னெண்ணுக. 636
செய்வலி செய்வழி செய்பவர்க் கருதுக. 637
வரவிற் செலவு வளருமேல் விடுக. 638
பெரும்பயன் றராதெனிற்பேணா தொழிக. 639
செய்வலி நெறியாள் சீரின் றேள்விடல். 640

## 65 -ஆம் அதிகாரம் -தெரிந்து தெளிதல்

செயல்செய் வாரிய லுயர்குடிப் பிறப்பே. 641
செம்மையே வாய்மையை தீவினை யின்மையே. 642
அறிவே யன்பே யழகே யாற்றலே. 643
பண்பே பொறையே பணிவே யின்சொலே. 644
மறவி நெடுநீர் மடிதுயி லிலாமையே. 645
அவாஅ வின்மையே தவாவினை யுண்மையே. 646
பொதுச்சிறப் பெனுமிரு மதிவாளர் கல்வியே. 647
இவையெலா மியைந்துள வினமெலாந் தெரிக. 648
அறம்பொரு ளின்புயி ரச்சத்தாற் றெளிக. 649
தெளியுமுன் கொண்டிடேல் தெளிந்தபி னையுறேல். 650

## 66 -ஆம் அதிகாரம்- செய்வினை யாளுதல்

நன்றுதீ தெண்ணி நலம்புரிவா னாள்க. 651
வருவாய் பெருக்கி வளஞ்செய்வா னாள்க. 652
ஊறுநா தாற்று முணர்வோனை யாள்க. 653
உறுமூ றொழிக்கு முரவோனை யாள்க. 654
வினையினிற் றிரியா மெய்யனை யாள்க. 655
இதையிதான் முருப்பனென் றதையவன் பால்விடல். 656
அதன்பி னவனையே யதற்குரிய னாக்குக. 657
வினைக்கண் வினைசெயும் வீரனை யையுறேல். 658
செயல்செயும் பலரையுந் தினந்தொறு நாடுக. 659
செயன்முறை செய்தவன் சிந்தைகண் டாற்றல். 660

## 67 - ஆம்அதிகாரம்- ஒற் றாளுதல்

ஒற்றுவினை ஞர்பகை சுற்றமறைந் தறிவது. 661
கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தறிவது. 662
உறுப்பெலாஞ் சிதைப்பினு முகாஅமை வல்லது. 663
உலகெலா நிகழ்பவை யொற்றினா லறிக. 664
ஒற்றுரை சான்றநூல் கொற்றவன் கண்களே. 665
ஒற்றிலார் கொற்றமும் வெற்றியு மிழப்பர். 666
ஒற்றுரைத் ததனைவே றொற்றினா லொற்றுக. 667
ஒற்றுமூன் றொத்திடி னுண்மையென் றறிக. 668
ஒற்றொற் றாயிரா துணரா தாள்க. 669
ஒற்றிற் கயலா ருணர்ந்திடா தீக. 670

## 68 -ஆம் அதிகாரம்- உரை நூலாளுதல்

உரை நூல் புரைதவிர புகழ்சால் நூல்கள். 671
அழியாப்பொருள்களை யறைபவே புகழ்பெறும். 672
அவைமெய்ப் பொருளே யதிற்சே ரறனே. 673
பொருளிலா தறனிலை புணர்விலா தொழிவிலை. 674
ஆதலா லவையு மழியாப்பொருள்களே. 675
அவ்வைம் பொருளிலு மடங்காப் பொருளிலை. 676
புதுநூ லுடனே புகழ்பெற லரிது. 677
ஆதலா லுரை நூலவை சொலுந் தொன்னூல். 678
அவைபல மொழியிலு மமைந்துள மறைகள். 679
இனியநந் தமிழி னிலக்கிய மிலக்கணம். 680

## 69 -ஆம் அதிகாரம்- அமைச் சாளுதல்

அமைச்சர சிறந்தினி தமைமவன சொல்வது. 681
அரசு சொல் வனவு மமைத்துத் தருவது. 682
அரசின் செயற்கெலாஞ் சிரசென நிற்பது. 683
அரசின் குடிக்கெலா மன்னையா நிற்பது. 684
அரசுயிர்த்துணையா வறனெலாஞ் செய்வது. 685
அதனல மரசிய லனைத்துநன் காளுதல். 686
நூலிய லுலகிய லுண்ணறி வுடைமை. 687
காமமும் வெகுளியுங் கைக்கொளா தமைதல். 688
அமைச்சுபட் டியைப்போ லமைந்தறம் புரிக. 689
அரசுவிக் கிரமனி னன்புகொண் டாள்க. 690

## 70 -ஆம் அதிகாரம் - அறிந்து சொல்லல்

நாநல மழியா நலமென மொழிப. 691
ஆக்கமுங் கேடு மதின்வரு மென்ப. 692
அறனும் பொருளு மதின்வரு மன்ற. 693
அகிலநிற் பதுமஃ தமைதலா னன்றே. 694
சொல்லு மிரயாலெலா மொல்லும் வகைசொலல். 695
அவையறம் பொருடர வமைத்துச்சொல்லல். 696
கேட்போர்க் கின்பங் கிளைக்கச் சொல்லல். 697
சுருங்கத் தொகுத்து விளங்கச் சொல்லல். 698
வரிசைப் படுத்தி மனங்கொளச் சொல்லல். 699
மறுக்கா விதத்து மாணுறச் சொல்லல். 700

## 71 -ஆம் அதிகாரம்- பண்பு செய்தல்

பாடறிந் தொழுகலே பண்பென மொழிப. 701
பண்பா லுலக முண்டெனும் பொதுமறை. 702
மக்களுட் பண்பிலார் மரமெனப் படுவர். 703
பெரியார்க் கடங்கி யுரியவை வழங்குக. 704
சிறியரை யடக்கிச் செய்வன செய்க. 705
மெல்லியன் மகளிருண் மென்மைபா ராட்டுக. 706
நண்பருள் ளுவப்புற நண்ணிநின் றொழுகுக. 707
பகைவருள் ளூட்கமே வகைபுரிந் தொழுகுக. 708
சலவருட் சாலச் சலஞ்செய் தொழுகுக. 709
பண்பர சின்பெலா மெண்பதத் தாலாம். 710

## 72 -ஆம் அதிகாரம்- பெரிய வரசரைச் சேர்தல

பெரிய வரசர் பெரியநா டாள்பவர். 711
சிறிய் வாசர்பாற் றிறைநனி கொள்பவர். 712
எவ்வர சர்க்கு மிளையாத் திறத்தினர். 713
திறனெலாம் பெருக்கி யறனெலாஞ் செய்பவர். 714
மறஞ்செயு மரசரின் றிறஞ்சிதைத் தொழிப்பவர். 715
பெரிய வரசர் பெரியார்க் கடுத்தவர். 716
அவரைச் சேர்தலா வரும்பெரு மாக்கமாம். 717
அமைச்சராய்ப் புலவரா யவரவை சேர்க. 718
அருவினைத் தலைவரா யவர்பாற்சேர்க. 719
அவருளங் கொளநடந் தரியவை பெறுக. 720

## 73 -ஆம் அதிகாரம்- அவர்பா லொழுகல்

அகலா தணுகா தனற்காவார் போல்க. 721
அன்பொடு மெய்யொடு மடங்கிநின் றொழுகுக. 722
அவர்முன் செவிச்சொ லயனகை பொருந்தேல். 723
அவர்சொலி னலாலொன் றறிந்திட விரும்பேல். 724
அவர்க்கா வனவு மமையங்கண் டியம்புக. 725
அவர்விழை பவற்றை யகத்தினும் விழையேல். 726
அவரை யுறாவகை யாங்கணு மொழுகுக. 727
இளைய ரினத்தின ரெனநினைந் திகழேல். 728
பழையவ ரெனினும் பண்பிலா தனசெயேல். 729
தனக்குவேண் டுவவவர் சாற்றெனிற் சாற்றுக. 730

## 74 -ஆம் - அதிகாரம்- குறிப்புணர் வுடைமை

குறிப்புணர் விரண்டு கூறா கும்மே. 731
குறிப்பி னுணர்த்தலே குறிப்பி னுணர்தலே. 732
குறிப்பி னுணர்த்தல் கூறா துணர்த்தல். 733
குறிப்பி னுணர்தல் கூறா துணர்தல். 734
இவையர சமைச்சிற் கின்றியமை யாதவை. 735
அகத்தினி லுள்ளது முகத்தினிற் றெரியும். 736
மொழியான் மறைப்பினு முகமதைக் காட்டும். 737
முதுவர் குறிப்பினான் மொழிகுவ ரறிகுவர். 738
முகங்கண் களினான் மொழிகுவ ரறிகுவர். 739
முன்சொல் குறிப்பினு மொழிகுவ ரறிகுவர். 740

## 75 -ஆம் அதிகாரம்- அரியவை பெறுதல்

அரியவை நட்புநா டரண்பொருள் படையே. 741
அவையொருங் கெய்தின்வா யமிழ்தடைந் தற்றே. 742
ஒன்றெய் தினும்பிற வுண்டா மெளிதே. 743
ஒன்று மிலாது நன்றுற லரிது. 744
அவைபெரு மன்னர்க் கரியன வல்ல. 745
அவருளங் கொளச்சொலி னவரவை யளிப்பர். 746
அவரையோர் தந்தையா வறிந்திட வுடன்படல். 747
அவர்பின் வேண்டுவ வளித்திட வுடன்படல். 748
அவரது பகையை யழித்திட வுடன்படல். 749
பிறவுமொத் தியைவன பெற்றலாம் பெருக்குக. 750

## 76 -ஆம் அதிகாரம்- நாடு

நாடு நாடுவ நல்குநா னிலத்தது. 751
மலைகாடு வயல்கடல் மருவிய நானிலம். 752
அவை குறிஞ்சி முல்லை மருத நெய்தல் . 753
அவைபல வுயிருணா மரமுதற் றாங்கும். 754
ஒரு மொழி வழங்குவ தொருதனி நாடு. 755
ஒருபெருங் கண்டத் துறுவவக நாடு. 756
பிறபெருங் கண்டத் துறுவபுற நாடு. 757
பெருங்கடன் மலையாற் பிரிவது கண்டம். 758
கடலுந் தீவுமயற் கண்டமொடு சேரும். 759
பலபெருங் கண்டமு முலகெனப் படுமே. 760

## 77 -ஆம் அதிகாரம்- நாட்டுச் சிறப்பு

நாட்டுச் சிறப்புநல் வளன்பல வமைதல். 761
உயிர்களு முணாக்களு மொக்க நிறைதல். 762
நிலநதி மலைகட லைநிதம் வளர்தல். 763
அரும்பொருள் பெரும்பொரு ளாலய மிகுதல். 764
அரணு மரசு மமைந்துடு நிற்றல். 765
உறுபசி யரும்பிணி செறுபகை மிலாமை. 766
செல்வமு மின்பமுஞ் சீரும்பெருகல். 767
ஒழுக்கமுங் கல்வியு முயர்நிலை நிற்றல். 768
திறந்தகை வாய்மை யறந்தவம் வளர்தல். 769
அருளுமெய் யறிவு மமைந்து பரவல். 770

## 78 -ஆம் அதிகாரம்- அரண்

*அரணுயிர் பொருள்களை யளிக்குமோர் காப்பு.* 771
*இயற்கையுஞ் செயற்கையு மியைந்தர ணாகும்.* 772
*அரண்புற வரணக வரனென விரண்டு.* 773
*புறவரண் புறநா டுறாவகை காப்பது.* 774
*அகவர ணரசுயி ரரும்பொருள் காப்பது.* 775
*கண்டத்தைச் சூழ்ந்துள்ள கடனீர் புறவரண்.* 776
*அதனை யடுத்துள வருநிலம் புறவரண்.* 777
*நிலத்தை யடுத்துள்ள மலைத்தொடர் புறவரண்* 778
*மலையை யடுத்துள மரக்காடு புறவரண்.* 779
*நாட்டகத் தமையுமிந் நான்கு மகவரண்.* 780

## 79 -ஆம் அதிகாரம் - அர ணமைத்தல்

*அரணிலார்க் கரசிலை யரசிலார்க் கரணிலை.* 781
*அரணன் கமைந்திடி னரசெலாங் கொள்ளும்.* 782
*அரணன் கமைத்தலோ ரரும்பெருஞ் செயலே.* 783
*அரணெலா முரியரா லமைத்திடல் வேண்டும்.* 784
*புறவர ணான்கையும் பூரண மாக்குக.* 785
*நாட்டி லகவர ணலம்பெற வியற்று.* 786
*அவற்று ளகழ்மதி லரசில மாக்குக.* 787
*புறவக நெறிகளைத் திறனுடன் பொருத்துக.* 788
*அவைகணத் தடைக்கவும் திறக்கவும்வேண்டும்.* 789
*நெறியுள விடனெலாம் பொறிகளை நிரப்புக.* 790

## 80 -ஆம் அதிகாரம்- அர ணளித்தல்

*அரண்படை யளிக்குமஃதளிப்பது படையே.* 791
*நீரி லரும்படை நெடுங்கல நிறுத்துக.* 792
*நிலத்தி லருந்தொழில் வலப்படை நிரப்புக.* 793
*மலைமதில் களிலரு வினைப்படை நாட்டுக.* 794
*காட்டுட் பகைகொலுங் கரவெலா மாக்குக.* 795
*அரணுட் புறனெலா மாம்விளை வாக்குக.* 796
*உடைபடைக் கலமெலாந் தடைவரா தியற்றுக.* 797
*அவரவர் வசிப்புக் காமில மாக்குக.* 798
*அகழ்மதில் சூழிலத் தரசினம் வாழ்க.* 799
*அகவரண் களையர சநுதினங் காண்க.* 800

## 81 -ஆம் அதிகாரம்- பொருள்

விற்கத் தக்க விலையுடைய யது பொருள். 801
பொருளின் பறம்புகழ் பொருந்திடச் செய்யும் . 802
பயனழ கருமையா லுயர்வஃ தடையும். 803
விலையிடம் பொழுதால் வேறுபா டுற்றிடும். 804
பொருண்மண் முதனாற் பூதங்கள் பிராணிகள். 805
அவற்றினின் றாவன வாக்கப்படுவன. 806
உத்தம மவற்றுண் முத்தாதி மணிகளே. 807
வயிர முதல் ரத்நமே பொன்முத லுலோகமே. 808
நவதா னியமே நன்மரஞ் செடிகளே. 809
உணவுடை யிலஞ்செல வணியமர்க் குரியவே. 810

## 82 -ஆம் அதிகாரம்- பொருட்சிறப்பு

பொருளிற் சிறந்தது புகலவொன் றில்லை. 811
அதுநினைத் தவையெலா மளிக்குந் திறத்தது. 812
நீர் சூழுலகெலா மோர்நொடி யிற்றரும். 813
மன்னர்மன் னவரையுந் தன்னடி வீழ்த்தும். 814
அருளையு மெய்யையு மடைந்திடச் செய்யும். 815
பொருளிலா ரின்பறம் புகழ்மெய் யிழப்பர். 816
மடையராய்த் தம்மரு நடையெலாம் விடுவர். 817
அடியராய்ச் சிறியரா யலக்கணுற் றுழல்வர். 818
பசியினும் பிணியினும் பட்டுழந் தழிவர். 819
பழியுளு நரகுளு மழியா துறைவர். 820

## 83 -ஆம் அதிகாரம்- உழவு

உழவு தொழினில விளையுளைச் செய்தல். 821
உழவு ருயிர்கலெலா முயிரெனத் தக்கவர் . 822
உழவுசெய் முறைநலங் கிழவர்தாங் காண்டல். 823
காடுநின் கழித்துக் கோடையி லுழுதல். 824
நலத்திற் கிசைவன விதைத்திடத் துணிதல். 825
வித்திற் காமெரு மெத்த விடுதல் . 826
வேர்செலு மாழ மோர்செல வுழுதல் . 827
பதநன் கறிந்துநல் விதைசெல விதைத்தல். 828
களைகட்டு நீர்பாய்ச்சிக் காத்துப் பயன்கொளல். 829
ஒருபலன் றருநிலத் திருபல னாக்குதல். 830

## 84-ஆம் அதிகாரம்- வாணிகம்

வாணிகம் பண்ட மாற்று நற்றொழில். 831
அஃதெஞ் ஞான்று மரசிற் கடுத்தது. 832
அஃதிலார்க் கரசிலை யரசிலார்க் கஃதிலை. 833
அதன்முறை யதைநத மதிபர்தா நோக்கல். 834
கணிதமெப் பொழுதுநா நுனிவைத் தாளுதல். 835
கொள்ளிடங் கொடையிட முள்ளுணன் கறிதல். 836
கவெலாங் கூட்டிச் சிறிதேற்றி விற்றல். 837
எவர்க்கு மொருசொலே யின்புறச் சொல்லல். 838
கூனனி கொடுக்கு மடனனி யொழித்தல். 839
பிறரது பொருளையுந் தமதெனப் பேணல். 840

## 85 -ஆம் அதிகாரம்- கைத் தொழில்

கைத்தொழில் பொருடரு மெய்த்தொழி லாகும். 841
மற்றைய விரண்டையும் வளர்ப்ப தத்தொழில். 842
அத்தொழில் பேணா ரடைகுவர் வறுமை. 843
அத்தொழில் பல அவை யாடை நெய்தல். 844
உணற்குஞ் செயற்கு முதவுவ செய்தல். 845
வீடரண் முதலிய மேம்பட வியற்றல். 846
நலத்திற் செல்பல வலத்தே ராக்கல். 847
நீமுற் செல்பல நாவா யாக்கல். 848
நலநீ ருள்ளுள பலபொரு ளெடுத்தல். 849
காப்பிற் காம்பல கருவிக ளியற்றல். 850

## 86 -ஆம் அதிகாரம்- படை

பகையுயிர் படுத்தலாற் படையெனப் பட்டது. 851
உலகெலா மளிப்பதோ ருத்தம வரசே. 852
அரசரண் பொருள்களை யளிப்பது படையே. 853
இன்பமும் புகழு மீவது படையே. 854
மெய்யிய லடையச் செய்வதும் படையே. 855
படையிலா ரரசரண் படுபொரு ளிழப்பர். 856
அறம்புக ழின்பறி வருண்மெய் யிழப்பர். 857
அடியராய்ச் சிறைபுகுந் தலக்கணுற் றுழல்வர். 858
பிணியொடும் பசியொடும் பிணக்குற் றழிவர். 859
நரகமும் பழியுங் கிருகமாக் கொள்வர். 860

## 87 -ஆம் அதிகாரம்- படை வகை

படைவகை நான்கெனப் பகருவர், அவைதாம். 861
முன்னோர் வழிவரு மூலப் படையே. 862
நாட்டுளார் கூட்டு நாட்டுப் படையே. 863
காட்டுளார்க் கூட்டுங் காட்டுப் படையே. 864
கொடைநட் பால்வருங் கூலிப்படையே. 865
நான்கிலொவ் வொன்று நால்வகைப் படும்அவை. 866
நிலமிசை யமர்செயும் வலமிகு படையே. 867
நிலக்கீ ழமர்செயு நேரிலாப் படையே. 868
நீர்மிசை யமர்செயு நீர்க்கலப் படையே. 869
வானிற் றிரிதரும் விமானப்படையே. 870

## 88 -ஆம் அதிகாரம்- படைக்கலம்

படைக்கலம் பகைசெறப் படைகை யெடுப்பன. 871
படைக்கல மில்லெனிற் படையுமின் றாகும். 872
படைக்கல மீட்டல் பயப்பொரு ளீட்டலே. 873
பகைத்திற னெண்ணியே படைக்கல மியற்றுக. 874
விசையெரி கூருரம் விடமிக வியற்றுக. 875
வெடிப்பன தெறிப்பன விசைமிகல் வேண்டும். 876
எறிவன விடுவன வெரிமிகல் வேண்டும். 877
குத்துவ வெட்டுவ கூர்மிகல் வேண்டும். 878
உடைப்பன வறுப்பன வுரமிகல் வேண்டும். 879
படைகொலும்படைக்கலம் விடமிகல்வேண்டும். 880

## 89 -ஆம் அதிகாரம்- படை யமைத்தல்

பகைத்திற னழிக்கும்வகைத்தே ரியற்றுக. 881
பகைக்குழுச் சிதைக்கும் வயக்களி றீட்டுக. 882
குறித்த நெறிசெலுங் குதிரைகள் கொள்ளுக. 883
இறத்தலி னின்புறூஉ மறத்தினர்க் கூட்டுக. 884
தேர்மா பரியாள் சேனையா வகுக்க. 885
அறைப்படுத் தேகுதற் காஞ்சில வியற்றுக. 886
கடன்செலும் பலவகைக் கலக்குழு மியற்றுக. 887
விண்செலும் பலவகை விமானமு மியற்றுக. 888
அவையாள் படைபடைக் கலமொடு வழங்குக. 889
வரிசைத் தலைவரா வுரியரை யுயர்த்துக. 890

## 90 -ஆம் அதிகாரம் - படை யளித்தல்

படைதன் தன்னுரெனப் பார்த்துமன் னோம்புக. 891
தினம்படை நோக்கி திறன்மிகுந் திடச்செயல். 892
அவரவர் திறனறிந் தளிக்க வேதனம். 893
படையுவப் புறச்சீர் பரிசிலும் வழங்குக. 894
அமரிற் படுபவர் தமர்தமை யோம்புக. 895
படைகளின் கடன்தாம் பகைகொலல் கொலப்படல். 896
கூற்றையு மெதிர்த்திடு மாற்றலொடு செல்லல். 897
இழைத்த திகவாஅ திறந்துபுகழ்கொள்ளல். 898
தலைவரின் சொல்லெலா நிலையுறப் பணிதல். 899
தலைவரைத் தமதுநற் றாயினும் பேணுதல். 900

## 91 -ஆம் அதிகாரம் - நட்பு

நட்பெனப் படுவது பெட்புறு கேண்மை. 901
அதுநன் மகாருளத் தலரு நன்மலர். 902
அதனிய லடுத்தல ரகநக விரும்பல். 903
இடித்துக் கூற லிடுக்கண் களைதல். 904
புணர்ச்சி பழகுத லுணர்ச்சியா னட்பாம். 905
ஆய்ந்துநன் னட்பறிந் ததன்பின் கொள்ளுக. 906
ஆய்ந்தறி யாதுறல் சாந்துயர் தருமே. 907
மருவிப் பன்னா ளொருவா தாய்க. 908
வாய்க்கலா வனைய மாந்தரை நட்டல். 909
சூட்டுக் கோனிகர் துணைவரைக் கொள்க. 910

## 92 -ஆம் அதிகாரம் - பழமை

பழமையெத னாலுங் கிழமைகுன் றாதது. 911
அஃதுயர் நட்பி னருங்கனி யாகும். 912
பழமைமி னின்பம் பயப்பதொன் றில்லை. 913
பழயவர் பிழைப்பினும் பழமைமா றற்க. 914
அழிவந்த செய்யினு மன்பறா ராகுக. 915
பழமையை மறப்போர் பாம்பினுங் கொடியர் 916
அலக்கணுங் கேடு மழிவு முறுவர். 917
பழமையை விடாரைப் பாரும்விடாது. 918
பழையார்ப் பிரியாரை விழையாரும் விழைப. 919
பழமையைப் புதுமையிற் பார்ப்போம் பெரியர். 920

## 93 -ஆம் அதிகாரம்- ஆகா நட்பு

ஆகா நட்பிவ ணழிவுபழி தருவது. 921
அவைநனி தருபவ ரறிவில் பேதையர். 922
உறுவதே தூக்குஞ் சிறுமைமிகு மாந்தர். 923
வினையொடு தஞ்சொல் வேறுபடு வஞ்சகர். 924
ஒல்லுங் கரும முளுற்றாக் கள்ளர். 925
மிகைபல விழைத்து நகை செய்யும் பகைவர். 926
பக்கத்துறைந்து பதம்பார்த் திருப்பவர். 927
அட்டைபோ லொட்டிநின் றரியவை கவர்வோர். 928
கள்ளுங் கவறுங் கைவிடாப் பதகர். 929
விடருந் தூர்த்தரு நடருமுள் ளிட்டோர். 930

## 94 -ஆம் அதிகாரம்- இகல்

இகலெனப் படுவ துளமாறு பாடு. 931
நகறரு நுட்பிற் கிகன்மறு தலையாம். 932
அதனிய லடுத்தவ ரழமனம் விரும்பல். 933
இடருற மொழித லிடுக்கண் புரிதல். 934
எதிருணர் வழுக்கா றிறுகுளத் தால்வரும். 935
இகலுள மென்று மெரிந்து தன்புறும். 936
அன்போ தட்பமோ வின்போ வுறாது. 937
இகல்பா ராட்டுவார் தகல்காண் பரிது. 938
அருமைச் சுற்றமு மாக்கமு மிழப்பர். 939
கேடு மழிவுங் கிளைகளாக் கொள்வர். 940

## 95 -ஆம் அதிகாரம் - பகைமை

பகைமை யென்ப திலகது முதிர்வு. 941
பழமையின் மறுதலை பகைமை யென் றறிக. 942
பகைமையுட் கொடியதுட் பகைமையென் றறைப. 943
அதனினுங் கொடியதிங் கரியவை கவர்வது. 944
பகைமையை யுட்கொள றகைமையன் றென்ப. 945
அதைவிடா தவர்பா லியாதிவண் செய்வது. 946
அன்புபா ராட்டி யவதை வளர்ப்பதோ. 947
ஈகையென் றவர்கரத் தின்னுயிர் விடுப்பதோ. 948
அறமென வெண்ணித் துறவினைக் கொள்வதோ. 949
தம்மா ருயிரைத் தாமழித் தொழிவதோ? 950

## 96 -ஆம் அதிகாரம்- பகையடு நெறி

பகைமையை விடாரைப் பகைத்தடல் வழக்குக. 951
பகையினை யடற்குப் பலபல நெறியுள. 952
எதற்கும்பொருளறி வின்றியமை யாதது. 953
ஒல்லு மிடத்தெலாம்வெல்லு மமர்நலம். 954
ஒல்லா விடத்தினி லுபாய முறைநலம். 955
முறையின் சொல்லே கொடைபிரிப் பழிப்பே. 956
முன்னய விரண்டுந் தன்னினாம் வகைசெயல். 957
பின்னிய விரண்டும் பெருந்துணை கொடுசெயல். 958
உட்பகை யினரை யுட்பகைத் தடுக. 959
ஒட்டிமேய் வாரை யொட்டி மேய்ந் தடுகு. 960

## 97 -ஆம் அதிகாரம்- அமர்வகை

அமர்வகை நான்கென வறைகுவ ரவைதாம். 961
வெட்சியே வஞ்சியே யுழிஞையே தும்பையே. 962
வெட்சிநல் லுயிர்களை விரோதிபாற் கவர்தல். 963
அதினிக மும்பல வமருஞ் செயலும். 964
வஞ்சிமண் ணசைமன் னஞ்சவடல் குறித்தல். 965
அதினிக மும்பல வமருஞ் செயலும். 966
உழிஞையரண் முற்றி யுரத்தினாற் கோடல். 967
அதினிக மும்பல வமருஞ் செயலும். 968
தும்பைமுன் வந்தமன் மைந்துதலை யழித்தல். 969
அதினிக மும்பல வமருஞ் செயலும். 970

## 98 -ஆம் அதிகாரம்- அமர்த் திட்பம்

அமர்த்திட்ப மொருவ ரகத்திட்ப மென்ப. 971
ஊறுறா தாற்றுக வூறுறிற் றளரேல். 972
அமர்க்கெழும் வரையய லறியா தமைக. 973
சொல்லுத லெளிது செய்தலோ வரிது. 974
அமரின்மாண் டாரை யனைவருந் துதிப்பர். 975
திண்ணியா ரெண்ணிய வெண்ணியாங் கடைவர். 976
உளிபோல் வாருள ருருக்கண் டிகழேல். 977
துணிந்தநல் லமரினைத் தூங்கா தாற்றுக. 978
பெரும்பயன் றருமமர் வருந்தியுஞ் செய்க. 979
அமர்திட்ப மிலாரை யாரையுமே வேண்டார். 980

## 99 -ஆம் அதிகாரம்- வலி யறிதல்

தனது படையையுந் தனத்தையு மறிக. 981
பகையது தனத்தையும் படையை யுமறிக. 982
தன்றுணைப்படையையுந் தனத்தையு மறிக். 983
பகைத்துணை தனத்தையும் படையையு மறிக. 984
இருதிறப் படைகளி னேற்றத்தாழ் வறிக. 985
இருதிறப் படைக்கல வேற்றுத்தாழ் வறிக. 986
எவ்வமர் செயறனக் கெளிதென் றறிக. 987
அதுகொளும் பொருள்படை யாதிய வறிக. 988
அயன்மன்வரினா டளிக்குமா றறிக. 989
அனையவு மறிந்துபி னமர்செயத் துணிக. 990

## 100 -ஆம் அதிகாரம்- கால மறிதல்

வலிமிகு கூகையைப் பகல்வெல்லுங் காகம். 991
ஆகுங் காலத் தரியவு மாகும். 992
ஆகாக் காலத் தெளியவு மாகா. 993
தனக்காங் காலஞ் சார்ந்தமர் தொடங்குக. 994
பகைகெடுங் காலம் பார்த்தமர் தொடங்குக. 995
பருவம் வரும்வரை பகைவர்க் கடங்குக. 996
பருவம் வரினுடன் பகைவரை யடக்குக. 997
கூம்பும் பொழுது கொக்கொத் தமர்க. 998
அடர்க்கும் பருவத் தறுபோற் குத்துக. 999
காலமறிந் தேசெயின் ஞாலமுட னெய்தும். 1000

## 101 -ஆம் அதிகாரம்- இட னறிதல்

நெடும்புனலுண் முதலையா லடுங்களிறு படுமே. 1001
முதனிலத் தெறும்பான் முதலையும் படுமே. 1002
கால்வ னெடுந்தேர் கடலோ டாதே. 1003
நிலமிசை நாவாய் நின்றா டாதே. 1004
முரண் சேர்ந்தவர்க்கு மரண்சேர்த லன்று . 1005
மேவிருந் தமர்செயல் வெல்வோர்க்கு நன்று. 1006
பெருமலை யானுள பேடியும் வெல்லும். 1007
சிறுபகை தன்னிடத் துறுபகை யழியும். 1008
தெரியா விடத்துப் பெரியாரு மழிவர். 1009
இடங்கண் டல்லது தொடங்கிடே லமரே. 1010

## 102 -ஆம் அதிகாரம்- அமர் துணிதல்

ஒருமா னிடவுயிர்க் குலகெலா மாற்றா. *1011*
பலமா னிடர்தாம் படுமமர் நன்றோ? *1012*
படுமா னிடரிற் பலருயி ரன்றாம். *1013*
இவ்வொன் றலாலமர்க் கேதுபிறி தில்லை. *1014*
ஆன்றோ ரிதனையே யமர்க்கேது வென்ப. *1015*
அளிக்கப் படுவன வழிவன வெண்ணுக. *1016*
அளிக்கப் படுவன வதிகமேற் றுணிக. *1017*
பொருள்படை யமர்த்திறன் பொழுதிட னெண்ணுக. *1018*
அவைபகை யிற்றனக் கதிகமேற் றுணிக. *1019*
அன்றே லுலகெலா மழியினும் விடுக. *1020*

## 103 -ஆம் அதிகாரம்- தூது விடல்

தூதொரு வர்க்குச் சொலசொலுஞ் சொல்லே. *1021*
எதிரியை யிணைத்தற் கெண்ணிய சொல்லே. *1022*
அறவா சமர்முன ரதுவிடல் வழக்கே. *1023*
அமையு மிடத்தெலா மதுவிடல் கடனே. *1024*
அறியாப் பகைக்கறி வளித்தலுங் கடனே. *1025*
தூதரைப் பாரிய ரூய்மையே வாய்மையே. *1026*
அன்பே துணிவே யழகே யாற்றலே. *1027*
நூலெலா மறந்துள நுண்ணறி வுடைமையே. *1028*
அமையமும் பிறவு மறிந்து சொலுந் திறனே. *1029*
அமைச்சர சியலெலா மமைந்துள தன்மையே. *1030*

## 104 -ஆம் அதிகாரம்- அமர் செய்தல்

தூதினந் தெருளாத் தீயரை யடன்முறை. *1031*
அவரை யறவடா தவர்தீ தடறலை. *1032*
அரும்படை பெருக்கி யவரஞ் சச்செயல். *1033*
அறியா நெறியா லவரைச் சிறைகொளல். *1034*
அவரய லமர்செயு மமையத் தரண்கொளல். *1035*
அவரது பகைகொண் டவர்மற வலியடல். *1036*
அவரிற் சிலர்கொண் டவர்மற வலியடல். *1037*
அவரிற் சிலர்பிரித் தவர்மற வலியடல். *1038*
அமையு மமர்செய் தவர்மற வலியடல். *1039*
அளவுக் கதிக மடுவது தீது. *1040*

## 105 -ஆம் அதிகாரம்- வெற்றியடைதல்

வெற்றிதன்பொருளை மீட்டர சாளுதல். 1041
பகைமறம்விடவும் பணியவுஞ் செய்தல். 1042
பகையவை செயும்வரை பக்கநாட்டமர்த்தல். 1043
பகைமற வலிகெடும் வகையெலாந் திருத்தல். 1044
அறஞ்செயு மாறதற் கதனா டீதல். 1045
வேரொடும் பகையடல் வெற்றியென் றறைப. 1046
அஃதரும் பெருமற மாமென் றறிக. 1047
அமர்பகை யெச்ச மனலதா மென்ப. 1048
அனலற வொழிப்பவ ரியாங்கணு முளரோ? 1049
அடாஅ வகையதை யடக்கிவைத் தாளுக. 1050

## 106 -ஆம் அதிகாரம்- அரசு கொள்ளல்

அரசினைத்தருவதற் கருகரந் தணரே. 1051
அருளறி வமைந்துள வறவோ ரந்தணர். 1052
அவரிலை யெனிற்றரற் கருக ரரசரே. 1053
மறத்தினைச் சிதக்குந் திறத்தின ரரசர். 1054
அவரிலை யெனிற்றாற் கருகர் வணிகர். 1055
பொருள்வே ளாண்மை புரிபவர் வணிகர். 1056
அவரிலை யெனிற்றரற் கருகர் பிறரே. 1057
பிறர்பிற தொழிலெலாம்பேணியிங் காள்பவர். 1058
அனைவருந் தரக்கொள லதிகநன் றென்ப. 1059
அறஞ்செயத் தானர சாதலும் வழக்கே. 1060

## 107 -ஆம் அதிகாரம்- குடி புரத்தல்

குடியெலாமகவெனக் கொண்டுமன் னோம்புக. 1061
அவர்க ளியாவரு மறிவுறச் செய்க. 1062
அரியகைத் தொழில்சில வறிந்திடச் செய்க. 1063
படைக்கலப் பயிற்சியிற் பாடுறச் செய்க. 1064
பொருளைக் குடியின் பொதுவெனப் பெருக்குக. 1065
குடிபொருள் செய்தற் கடிமுதல் வழங்குக. 1066
குடியில் வாழ்ந்திடக் குறைந்தன வழங்குக. 1067
குடிசெயூ தியத்துட் குடியினர் வாழ்க. 1068
பொன்றுநாண் மிஞ்சிய பொதுப்பொரு ளொடுகொளல். 1069
குடிபசித் துழலன்மன் குற்றமென் றறிக. 1070

## 108 -ஆம் அதிகாரம்- இறை கொள்ளல்

இறைகுடி யூதியத் திறைகொளு மளவே. 1071
அஃதறு பங்கிலொன் றாமென மொழிப. 1072
இறையிலா றொன்றனு ளிறையினர் வாழ்க. 1073
ஒன்றிறை கொளநடு வுதவிட வழங்குக. 1074
ஒன்றினாட் டகம்புற மோம்பலை நடாத்துக. 1075
ஒன்றினூர் நிலநல முயர்ந்திடச் செய்க. 1076
ஒன்றினே கல்வியோ டுயரற மாற்றுக. 1077
மிஞ்சுவ பொதுவொடு வேந்துவைத்தோம்புக. 1078
புவிநலங் குன்றிற் பொதுப்பொருள் வழங்குக. 1079
மறமன் நிலங்கொளத் திறஞ்செய வழங்குக. 1080

## 109 -ஆம் அதிகாரம்- முறை செய்தல்

குடியது குற்றமன் கடிவது முறையாம். 1081
கடியு மியலதன் காரணம் போக்கல். 1082
காரணம் போம்வரை காப்பினுள் வைத்தல். 1083
எதற்குமோர் வகையறி விலாமையே காரணம். 1084
செய்ததைச் செய்ய விடாமையே காப்பு. 1085
இவையே யறமுறை நவையே பிறவெலாம். 1086
முறைகண் ணோடா துயிர்வௌவ லென்ப. 1087
அம்முறை யழிவுறு மரசுசெய் மறமுறை. 1088
களையறி யாமை நிலங்குடி யொக்கும். 1089
களையோ களையுடை நிலமோ களைவது. 1090

## 110 - ம் அதிகாரம்- அறம் புரிதல்

அறமன் னுயிர்த்துய ரறுக்கு நல்வினை. 1091
அவ்வினை யுயிர்தொறும் வெவ்வே றாகும். 1092
அவையுடன் கண்டுநன் காற்றுதன் மன்கடன். 1093
துயர்முத லுயிர்க்கெலாந் துப்புர விலாமை. 1094
அதனை யிடத்ததை யமர்த்திவை யாமை. 1095
ஆறறி வினர்க்குநல் லறிவில்லாமை. 1096
உயிரெலா மதனை யுணவுற வோம்புக. 1097
அதனை யெல்லையு ளமர்த்தியைத் தாளுக. 1098
ஆறறி வினர்க்குநல் லறிவெலாம் வழங்குக. 1099
அறவிரி திருக்குற ளாதியா லறிக. 1100

அரசியல் முற்றிற்று.

# அந்தணரியல்

## ௲௱

### 111 -ஆம் அதிகாரம்- அந்தண ரியல்பு

அந்தண ரறத்தோடு செந்தண்மை பூண்டவர். 1101
மாணவர் தம்மையே வளர்க்கு மியல்பினர். 1102
அடுத்தவர் தம்மையு மளிப்பவரில் வாழ்வார். 1103
அரசர்நல் லுயிரெலா மளிக்குந் திறத்தினர். 1104
அனைத்துயிர் தம்மையு மளிப்பவ ரந்தணர். 1105
முதன்முந் நிலையினர் முகைமலர் காயனர். 1106
அந்தணர் மெய்ந்நிலை யடைந்தவர் கனிவிதை. 1107
விதையே மரமிலை மென்முகை யாதியாம். 1108
மெய்யே யுலகுயி ரைந்நிலை யினராம். 1109
முறைமுகை விதையா முதனிலை யுயிர்மெயாம். 1110

### 112 -ஆம் அதிகாரம்- அந்தண ரொழுக்கம்

ஓதலி னந்தணர்க் கொழுக்கநன்றென்ப. 1111
அந்தணர்க் கொழுக்க மனற்குச் சூடுபோன்ம். 1112
ஒழுக்கமு மறிவுமுடனிகழ் தகைமைய. 1113
ஒன்றன் றெனின்மற் றதுவு மிலதாம். 1114
ஞானச் சொல்லெலாங் கானற் சலமாம். 1115
ஒழுக்க மறிதற் குரைகலின் றென்ப. 1116
பகுத்தறி வறநா லுகுத்தவ ரேயவர். 1117
ஒழுக்கமெய் வுயர்க்கு மூறுசெய் யாமை. 1118
இயலு நன்றெலா மிடைவிடா தியற்றல். 1119
இழுக்கமில் விரண்டிலொன் றியற்றத் தவறல். 1120

## 113 -ஆம் அதிகாரம்- கூடா வொழுக்கம்

*சாமிக ளுட்பலர் காமிக ளாயினர்.* *1121*
*தேசிய ருட்பல ராசின ராயினர்.* *1122*
*மகந்துக ளுட்பல ரிகந்தன ரொழுக்கம்.* *1123*
*தம்பிரான் மறமெலா மெம்பிரா னறிவர்.* *1124*
*போலியந் தணர்பலர் புரியா மறமிலை.* *1125*
*அரசரு ளுளர்மறங் கரவினி லாள்பவர்.* *1126*
*இல்வாழ் வினருளும் புல்வாழ் வினருளர்.* *1127*
*மாணவ ருளுமுளர் கோணல் கொண்டவர்.* *1128*
*உலக மென்றுநல் லொழுக்கங் கொள்ளும்?* *1129*
*உள்ளும் புறமு மோரியல் பூணும்?* *1130*

## 114 -ஆம் அதிகாரம் -மானங் காத்தல்

*மானமென் பதுதம் மதிப்பை விடாமை* *1131*
*தத்தந் நிலைக்கு தாழ்ந்தசெய் யாமை.* *1132*
*தத்த மியற்குத் தக்கவா றொழுகல்.* *1133*
*மானொரு மயிரற மாயுமல் விடத்தே.* *1134*
*மனிதர்தம் மதிப்பற வாழ்ந்திடல் வியப்பே.* *1135*
*மாணவ ரிழுக்கலின் மடித னன்றே.* *1136*
*இல்லின ரிவறலி னிறத்த னன்றே.* *1137*
*அரசறஞ் செயாமையி னழித னன்றே.* *1138*
*தாழ்ந்தார்த் தெறுதலிற் சாத னன்றே.* *1139*
*அந்தணர் வெகுளவி னழற்புக னன்றே.* *1140*

## 115 -ஆம் அதிகாரம்- வெஃகாமை

*வெஃகுதல் பிறர்பொருள் விரும்புங் குற்றம்.* *1141*
*வெஃகலை மறத்தின் வித்தென மொழிப.* *1142*
*அதுதீ யவாவி னங்குர மாகும்.* *1143*
*காமமுங் களவுங் கவிதழை யிலைவிடும்.* *1144*
*கொலையும் பொய்யுமாங் கொம்பொடு கிளைவிடும்.* *1145*
*அழிதகு மறங்களா மரும்பொடு மலர்விடும்.* *1146*
*பழியுங் கேடுமா மழியாக் காய்தரும்.* *1147*
*அழிபல நிரயக் கழிபெருங் கனிதரும்.* *1148*
*பொறிவழித் துன்பமாஞ் செறிபல சுவையாம்.* *1149*
*ஆதலால் வெஃகலை யறவே விடுக.* *1150*

## 116 -ஆம் அதிகாரம்- வெகுளாமை

வெகுளி யகத்தெழும்வெங்கனற் சுடரே 1151
இச்சுடர் தம்மையு மினத்தையு மழிக்கும். 1152
நகைய யுவகையைத் தகையைக்கொல்லும். 1153
பகையைச் சொல்லரும் வகையில் வளர்க்கும். 1154
மிகையுந் துயரு மிகுந்திடச் செய்யும். 1155
வெகுளியை விடற்கவ் விருப்பமுட் கொள்ளுக. 1156
வெகுளியுள் ளெழுங்கா லகுதலே புரிக. 1157
வெகுளியின் கேடெலாம் விரைந்துட னெண்ணுக. 1158
ஆடிகொண் டுடன்முக வழகினை நோக்குக. 1159
வெகுளியை யடுதலே தகுதியென் றடுக. 1160

## 117 -ஆம் அதிகாரம்- இன்னா செய்யாமை

மன்னுயி ருளமுடல் வருத்துவ வின்னா. 1161
அவைநீச் செயலே யச்சொலே நினைப்பே. 1162
கொடியது செயலுட் கொலையென மொழிப. 1163
கொலையினு மிந்தியங் களைவது கொடியது. 1164
அவைகெட வதைசெய லதனினுங்கொடியது. 1165
கொடியவை சொல்லுட் குறளைபொய்நிந்தை. 1166
கொடியவை நினைப்புட் கொலைமுத லினைப்பு. 1167
இன்னா செய்தார்க் கின்னா வந்துறும். 1168
ஒன்றொரு கோடியாய் பின்றைநாள் வந்துறும். 1169
உற்றவுயி ரறிவள வுறுத்தும் நிற்கும். 1170

## 118 -ஆம் அதிகாரம்- தவஞ் செய்தல்

தவமென் பதுதனைச் சார்ந்தநோய் பொறுத்தல். 1171
உணர்வுடை யுயிர்கட் கூறுசெய் யாமை. 1172
கைந்நிலை விடாது மெய்நிலை யுள்ளல். 1173
மனத்தை யடக்கி வசஞ்செய முயறல். 1174
அதற்கின்றி யமையா வப்பியா சங்கள். 1175
தவஞ்செய லொன்றே தஞ்செய லென்ப. 1176
தவத்தி னளவே தனமுறு மென்ப. 1177
தவமுடித் தாரே சமனைக் கடப்பர். 1178
தவமே யிகபரந் தருநன் முயற்சி. 1179
தவமே யியற்றுக தகவுற வேண்டுவோர். 1180

## 119 -ஆம் அதிகாரம்- துற வடைதல்

*துறவியா னெனதெனு முறவினை யொழித்தல்.* 1181
*மன்னு யிரெல்லாந் தன்னுயி ரென்றல்.* 1182
*தன்பொருண் மன்னுயிர் தமதென வாழல்.* 1183
*துறவென விவ்வகத் துறவையே மொழிப.* 1184
*புறத்துற வெல்லாம் பொய்த்துற வாமே.* 1185
*துறவந் தணருக் குறவொழுக் கன்றோ?* 1186
*தாய்தந் தையரைத் தள்ளலுந் தன்மையோ?* 1187
*தன்னுயிர்த் துணையைத் தவிர்தலுந் தன்மையோ?* 1188
*தீயவா மிவையெலாம் பேயா டுறவே.* 1189
*தமரையே யளியார் பிறவுயி ரளிப்பாரோ.* 1190

## 120 -ஆம் அதிகாரம்- அருள் புரிதல்

*அருள்பல வுயிர்க்கு மன்புபா ராட்டல்.* 1191
*உயிரெலா மெய்யது பயிரெனக் காண்க.* 1192
*எவ்வகை யுயிர்க்கு மின்னா செயற்க.* 1193
*அவற்றிற் காவன வனைத்து முதவுக.* 1194
*தமையவை வருத்தினு மவைதமை யோம்புக.* 1195
*அருளுடை யார்மெய்ப் பொருளடை வதுதிடம்.* 1196
*அருள்பே ணாருள மருண்மிகு முண்மை.* 1197
*சுயநயச் செயலரு ளினையற வோட்டும்.* 1198
*பரநயச் செயலருள் பரவிடச் செய்யும்.* 1199
*அருள்விடா தவரைமெய்ப் பொருள்விடா துண்மை.* 1200

### அந்தணரியல் முற்றிற்று

# மெய்யியல்

### 121 -ஆம் அதிகாரம்- மெய் யுண்மை

உயர்கரி சுருது யுத்தி யநுபவம். 1201
தூயர் பகருரை சுருதியென்ப. 1202
பலமதத் தூயரும் பகர்ந்துள ருண்மை. 1203
ஏது சிலகொண் டோதுவ துத்தி. 1204
ஆத னிலவ லழித லிவனுள. 1205
அவைசெயக் கர்த்தா வவசிய மென்க. 1206
அறிந்துள் ளுணர்தலை யநுபவ மென்ப. 1207
இடருறும் போழ்துமெய் யெண்ணுகின் றனர் பலர். 1208
பாவஞ் செயவுளம் பதைப்ப தநுபவம். 1209
அரசரு மாளப் படுவ தறிகிறோம். 2110

### 122 -ஆம் அதிகாரம்- மெய்யின் அடக்கநிலை

அடக்க நிலைமெய் யடங்கிய வறிவு. 1211
அண்டப் பொருளெலா மணுக்களின் சேர்க்கை. 1212
வலியிலா தணுக்கண் மருவிநிற் கும்மோ? 1213
அண்டஞ் சுற்றலு மதுகொண் டன்றோ? 1214
ஆதலா லெங்கணு மஃதமைந் துளதே. 1215
அகில நிகழுமா றாள்வ தறிவு. 1216
அன்றே லொழுங்கா வவைகண நிகழுமோ? 1217
ஆதலா லெங்கணு மறிவமைந் துளதே. 1218
நிறைபொரு ளிரண்டு நிலவா வென்ப. 1219
ஆதலால் வலியு மறிவு மொரேபொருள். 1220

## 123 -ஆம் அதிகாரம்- மெய்யின் விளக்கநிலை

விளக்க நிலைமெய் விளங்கு மறிவு. 1221
அடக்கமெய் விறகு ளடங்கிய தீப்போன்ம். 1222
விளக்கமெய் கடைய விறகெழுந் தீப்போன்ம். 1223
ஐயறி வுயிர்களின் மெய்யொளி யடங்கும். 1224
ஆறறி வினரு ளவ்வொளி விளங்கும். 1225
அவர்மறஞ் செயச்செய வதனொளி குன்றும். 1226
அவரறஞ் செயச்செய வதனொளி பெருகும். 1227
அவரொழுக் கறிந்தபோழ் தஃதக விளக்காம். 1228
அவரொழுக் கடைந்தபோழ் ததுமலை விளக்காம். 1229
ஒழுக்கில்வாய் ஞானமஃ தொழிக்குங் காற்றாம். 2130

## 124 -ஆம் அதிகாரம்- மெய் யுணர்தல்

ஒழுக்க முடையா ருணர்வர் மெய்யை. 1231
அறநூ லெண்ணில வறைந்துள வொழுக்கம். 1232
அவற்றைவிட் டயலுற றவற்றைப் புரிதலாம். 1234
அடிவிட் டேணியி னந்தமே றுவரோ. 1234
அறநூல் கற்றுநின் றான்மநூ லாய்க. 1235
ஒருட லளவி லுறுமறி வான்மா. 1236
அணையுள குளநீர்க் கான்மா வினையாம். 1237
ஆன்மா மெய்யொன் றாணவம் வேற்றுமை. 1238
அறஞ்சே றொழுக்கா லாணவங் களைக. 1239
இலகுமெய் யுண்மை யுலகுமெய்த் தோற்றம். 1240

## 125 -ஆம் அதிகாரம்- மெய்ந்நிலை அடைதல்

உயிரியல் விடமெய் யியலுறு முடனே. 1241
விடலே வீடது மெய்யறஞ் செயினாம். 1242
மெய்யற மாந்தா மிகைவிட வுதவல். 1243
ஒழுக்க வுயிர்மெய் யுணர்ந்திட உதவல். 1244
உலகி லுயிர்க ணிலவுற வுதவல். 1245
இவ்வற மரசர்க் கியற்றுத லெளிது. 1246
அறிவ ரரச ராகுத லரிதோ? 1247
அரசரை யாள்வ தமைச்சறி வன்றோ? 1248
அறிந்தில் வாழ்ந்துல காண்டறஞ் செய்க. 1249
அருள்கொடு மெய்யற மாற்றிமெய் யடைக. 1250.

மெய்யியல் முற்றிற்று.

# மெய்யறம்

## அரும்பதவுரை

| சூத்திரம் - பதம் | | - | உரை |
|---|---|---|---|
| | | | |
| | **சிறப்புப்பாயிரம்** | | |
| 1 | வையம்ஓர் | - | உலகம் அறிந்து. |
| 4 | நுதலியது | - | (இந்நூல் கூறக்)கருதியது) |
| 8 | ஆன்ற | - | (கல்வி கேள்விகளால்) நிறைந்த |
| 8 | மாதேவன் | - | வித்வான் மகாதேவ முதலியார். |
| | **பாயிரம்** | | |
| 3 | கற்றுரைத் தாற்றுவோன் | - | (தான்) கற்று (ப்பிறர்க்கு)ம் உரைத்து (அறத்தை)ச் செய்வோன். |
| 4 | நுவல்திறன் | - | சொல்லும் முறை |
| 5 | மெய் | - | கடவுள். |
| 8 | புரிந்தனன் | - | இயற்றினேன். |

நூல

| | | |
|---|---|---|
| 1 | மாண் | சிறப்பு |
| 4 | வரைநிலை | நீக்கப்படுதல் |
| 6 | கடன் | கடமை |
| 6 | நன்று | அறம் |
| 5 | ஆதி | கடவுள் |
| 11 | உறும் | பொருந்தும் |
| 14 | சேருவ | பொருந்துவன |
| 15 | நணுகுவ | பொருந்துவன. |
| 16 | மடன் | மடமை |
| 16 | மடி | சோம்பல் |
| 17 | நவிலும் | சொல்லும் |
| 26 | ஆம்துணை | இயையும்உதவி |
| 26 | அமைந்து | அடங்கி |
| 30 | இயைந்தவர் | பொருந்தியவர் |
| 33 | செறிவாய் | இடையீடில்லாமல். |
| 34 | பகுத்தறியுயிர் | மனிதர் |
| 36 | உள்ளல் | நினைத்தல் |
| 37 | உள்ளியாங்கு | நினைத்தவண்ணம் |
| 39 | நடுவு | நீதி |
| 39 | ஓர்ந்து | அறிந்து |
| 40 | நிலை | தன்மை |
| 41 | தொடர்பு | சேர்க்கை |
| 42 | சிதைக்கும் | கொல்லும். வருத்தும் |
| 43 | வவ்வும் | கவரும் |
| 43 | மாக்கள் | இழிமக்கள். |
| 44 | துணைவர் | உயிர்த்துணைவர். |
| 44 | மா இனத்தார் | மிருகக்கூட் த்தினர் |
| 46 | புரைவளர் | குற்றத்தை வளர்க்கும் |

| | | |
|---|---|---|
| 47 கயவர் | - | கீழ்மக்கள் |
| 48 பசு | - | உயிர்; ஜீவன். |
| 48 பதி | - | இறை; சிவன் |
| 55 மன்னி | - | பொருந்தி |
| 62 இருபாலாரும் | - | ஆடவரும் மகளிரும் |
| 65 அறிதிறன் | - | உணரும் வலிமை |
| 67 மகார் | - | மக்கள் |
| 68 செறிந்திட | - | உள்ளத்தில் அமைய |
| 69 வல்லுநர் | - | வல்லவர். |
| 71 தலைப்படும் | - | முதன்மையுறும் |
| 73 தொகுதி | - | கூட்டம் |
| 74 அறிவுஉரன் | - | அறிவின்சக்தி |
| 76 தனு | - | கருவி |
| 77 மெய்முதலிய | - | ஐம்பொறிகள் |
| 80 உய்ப்பது | - | செலுத்துவது |
| 81 முத்தொழில் | - | ஆக்கல், அளித்தல், அழித்தல். |
| 81 அறன் | - | புண்ணியம் |
| 81 மறன் | - | பாவம். |
| 90 எனும் | - | என்னும் - நினைக்கும் |
| 94 உரன் | - | வலிமை |
| 94 வரன் | - | கணவன் |
| 99 வளி | - | வாதம் |
| 99 அனல் | - | பித்தம் |
| 99 நீர் | - | சிலேத்துமம் |
| 97 மறுத்து | - | குறைத்து |
| 98 சிலம்பம் | - | சிலம்பவரிசை |
| 98 மெய்ப்பயிற்சி | - | தேகாப்பியாசம் |
| 100 வளைந்திட | - | வேலைசெய்ய |
| 101 நிலை | - | உடல் |

| | | |
|---|---|---|
| 105 | படும் | இறக்கும். |
| 108 | தொழுநோய் | பெருவியாதி |
| 108 | அழும்நோய் | கண்ணீர் பெருகச் செய்யும் பிணி. |
| 110 | கூற்றம் | எமன் |
| 111 | அரித்த | தின்ற. |
| 114 | அரி | சிங்கம் |
| 117 | மக்களுன் | மனிதமாமிசம் |
| 117 | மறி | ஆடு |
| 118 | பொறி | மெய், வாய், கண், மூக்கு, செவி. |
| 138 | கவறு | சூதாடுகருவி. |
| 140 | கவறு உருள்களம் | சூதாடும் இடம். |
| 143 | ஏற்றம் | உயர்வு |
| 144 | பரந்து | பல இடங்களுக்குச்சென்று இரந்து |
| 158 | வழங்கும் | கொடுக்கும் |
| 161 | நிகழாதது | நடக்காதது |
| 161 | நிகழ்த்துதல் | சொல்லுதல் |
| 166 | வாயில் | வழிகள் |
| 170 | ஒரீஇயவர் | நீக்கியவர் |
| 174 | பொருபகை | அமர் செய்யும் விரோதிகள் |
| 178 | புன்மை | இழிவு |
| 179 | பொன்றல் | இறத்தல் |
| 180 | அடி | வேர் |
| 188 | நயன் | இன்பம் |
| 189 | பதடி | மனிதப்பதர் |
| 192 | இழுக்காறு | குற்றநெறி |
| 196 | சிறுமை | துன்பம் |
| 197 | கீழ் | கீழ்மக்கள் |
| 197 | வழுக்காறு | வழுக்குகின்ற நெறி |
| 198 | இலங்குதல் | நிலவுதல் |

208 தாய்மொழி - சுயபாஷை

211 மெய்யுறுப்பு - சரீர அவயவம்

217 நடை - ஒழுங்கு

219 உரு - வேடம்

222 அமைவுற - பொருந்த

234 உற்றுழி - துன்பம் உற்ற இடத்து

239 மிகை - குற்றம்

241 நடுவுள் - அளவுள்; எல்லையுள்

243 நடுவு - நடுவுநிலைமை

268 இகந்தார் - நீங்கியவர்

251 புலம் - விஷயம் - ஸப்தம்,
ஸ்பரிஸம்,ரூபம், ரஸம், கந்தம்

265 ஒன்றாக்கல் - ஒத்திருக்கச்செய்தல்

271 ஔீஇ - விலக்கி

272 அற்றம் - இறுதி; அழிவு

272 ஆவன - நன்மை பயக்கும் வினைகள்

277 எளியவர் - கேட்போர் அறியத்தக்க சொற்களாக

277 செல - கேட்போர் உள்ளத்தில் புகும்படி

277 அரியவை - (பிறர்சொல்லும்) எளிதில் அறியமுடியாத சொற்களை.

280 எதிரதா - வருமுன்னர்

285 உயிர்க்கும் - சுவாசமிடும்

289 ஊறு - இடையூறு (தோற்க)

293 முதுகிட - முதுகுகாட்ட

297 ஆற்றின் - வழியில்

298 கொடு - கொண்டு

299 தாழ்ப்பினும் - தாமதப்படினும்

300 விரி - விரிவு

302 எதிர்பால் - ஆணுக்குப்பெண்ணும்,

| | | | |
|---|---|---|---|
| | | | பெண்ணுக்கு ஆணும் |
| 304 | வேளாண்மை | · | பரோபகாரம் |
| 306 | இல்நிலை | · | கிருக ஆசிரமம் |
| 312 | எதிர்எதிர்வழி | · | (ஒன்றற்கொன்று) எதிராக இருக்கும் இரண்டு வழிகள் |
| 313 | மட்டம் | · | மேலளவு |
| 314 | சதுரம் | · | நீளமும் அகலமும் பெருக்கக் கண்ட தொகை |
| 315 | மேல் | · | மேலுள்ள |
| 316 | வளி | · | காற்று |
| 316 | அனல் | · | தீ |
| 316 | மா | · | மிருகம் |
| 317 | ஒளி | · | சூரிய வெளிச்சம் |
| 318 | பகுத்திடல் | · | பிரித்திடுக |
| 319 | நிலஅறை | · | நிலக்கீழ் அறை |
| 319 | மேல் | · | மேல்வீடு |
| 320 | தரு | · | மரம் |
| 328 | குடிமை | · | நற்குடிப்பிறப்பு |
| 328 | தூய்மை | · | மனசுத்தம், வாக்குசுத்தம், காயசுத்தம் |
| 329 | பருவம் | · | வயது |
| 330 | வரவு | · | வரும்பொருள் |
| 339 | இயற்றுவ | · | செய்யுங்கருமங்கள் |
| 342 | அகப்பொருள் | · | அகப்பொருள்நூல் |
| 347 | நிமித்தம் | · | காரணம் |
| 350 | மெய்யிணைதல் | · | கடவுளை அடைதல் |
| 359 | அடும் | · | கொல்லும் |
| 366 | அவனியில் | · | உலகத்தில் |
| 371 | துணை | · | மனைவி |
| 373 | முழுமகன் | · | அறிவிலி |

| | | |
|---|---|---|
| 377 நிறை | - | கற்பு |
| 392 பொறி | - | ஐம்பொறிகள் |
| 393 இகம் | - | உலகம் |
| 393 பரம் | - | கடவுள் |
| 400 பிழையாது | - | தவறாது |
| 401 ஏதம் | - | குற்றம்; நஷ்டம் |
| 401 ஊதியம் | - | கணம்; இலாபம் |
| 402 காதன்மை | - | காதலிக்கும் தன்மை |
| 406 புனை | - | தளை-விலங்கு. |
| 408 களித்தற்று | - | கள் குடித்ததுபோலும் |
| 409 அவை | - | சபை |
| 412 ஒண்மை | - | அறிவு |
| 413 இவறல் | - | உலோபம் செய்தல் |
| 416 மறை | - | இரகசியம் |
| 416 மிறை | - | துன்பம் |
| 417 இழுக்கல் | - | தவறுதல் |
| 425 படுபொருள் | - | வளர்பொருள் |
| 429 உறுவது | - | வரும்வேலை |
| 433 இறவு | - | குற்றம் |
| 443 ஒன்னார் | - | பகைவர் |
| 447 சோலைநீர் | - | சோலையிலுள்ள ஊற்றுநீர் |
| 448 இளம் பகல் | - | பகல் பத்து நாழிகை |
| 449 யாமம் | - | இரவில் நடுப்பத்து நாழிகை |
| 451 அயர்வு | - | களைப்பு |
| 453 சுழுத்தி | - | கனவற்ற கடும் உறக்கம் |
| 459 மெய்த்தொழில் | - | உடலுறுப்புக்களாற் செய்யப்படும் தொழில் |
| 462 அங்குரம் | - | முளை |
| 466 மெய்த்திறம் | - | உண்மையான வலி |

| | | | |
|---|---|---|---|
| 467 | தாழ்ந்டியே | - | குறைத்தே |
| 468 | இறந்து | - | அளவுகடந்து |
| 468 | படுவர் | - | அழிவர் |
| 470 | ஈட்டுவர் | - | சேகரிப்பர் |
| 479 | எச்சம் | - | புகழ் |
| 480 | நிச்சலும் | - | தினமும் |
| 482 | நகின் | - | சிரித்தால் |
| 493 | அரில் | - | குற்றம் |
| 500 | செற்று | - | கோபித்து |
| 508 | பயிற்றல் | - | பழக்கல் |
| 509 | அழுக்கு | - | மாசு; பொறாமை |
| 514 | தகையர் | - | தகுதியுடையவர் |
| 519 | பற்றலர் | - | பகைவர் |
| 524 | மருந்து | - | அமிழ்தம் |
| 525 | காப்பு | - | பாதரட்சை முதலியன |
| 530 | செல்வுழி | - | போகும் பொழுது |
| 530 | உள்ளிட | - | (பிரிவை நினைந்து) வருந்த |
| 531 | துஞ்சிய | - | இறந்த |
| 552 | ஆர்வலர் | - | அன்பு செய்யப்பட்டவர் |
| 553 | தவல் | - | கெடுதல் |
| 568 | ஒறுத்தார் | - | பதில் தீங்கு செய்தார் |
| 572 | முதல் | - | வேர் |
| 575 | அறவோர் | - | அறம்புரிவோர் |
| 576 | துவ்வார் | - | வறிஞர் |
| 578 | நன்மை | - | சுபகாரியம் |
| 578 | தீமை | - | அசுபகாரியம் |
| 580 | ஆணை | - | கட்டளை |
| 604 | சூழ்ச்சி | - | அறிஞரோடெண்ணுதல் |
| 606 | உரை | - | புகழ் |

| | | |
|---|---|---|
| 620 உணர்ச்சி | - | ஒருமைப்பட்டுணர்வு |
| 623 உற்றன | - | பொருந்தின |
| 640 சீர் | - | பொருத்தம் |
| 642 செம்மை | - | நடுவுநிலைமை |
| 646 தவாவினை | - | கெடாவினை(அறம்) |
| 647 பொது | - | கணிதமும் பாஷையும். |
| 647 சிறப்பு | - | மற்றையன (பொருள் முதலியன) |
| 644 வினைஞர் | - | வினைசெய்வோர். |
| 662 கடாஅ | - | (பார்த்தோர்) ஐயப்படாத. |
| 663 சிதைப்பினும் | - | வதைப்பினும். |
| 663 உகாமை | - | வெளிவிடாமை |
| 666 கொற்றம் | - | செல்வம் |
| 669 அயிராது | - | சந்தேகியாது |
| 674 புணர்வு | - | இல்லாளோடு கூடி வாழும் வாழ்க்கை. |
| 674 ஒழிவு | - | வீடு |
| 682 அமைத்து | - | முடித்து; செய்து |
| 684 பட்டி | - | விக்கிரமாதித்தனது மந்திரி. |
| 660 விக்கிரமன் | - | விக்கிரமாதித்தன். |
| 698 ஒல்லும் | - | பொருந்தும் |
| 701 பாடு | - | பெருமை |
| 708 உள்உட்க | - | உள்ளம்நடுங்க |
| 708 மேல்நகை | - | வெளியில்மாத்ரம் சிரித்தல் |
| 709 சவவருள் | - | வஞ்சகருள் |
| 710 எண்பதம் | - | காட்சிக்கு எளியனாயிருக்குந் தன்மை |
| 712 திறை | - | கப்பம் |
| 713 இளையா | - | பின்னிடாத |
| 719 வினை | - | போர் |
| 720 உளம்கொள | - | மனம் திருப்தியடைய |
| 722 மெய் | - | உண்மை |

| | | | |
|---|---|---|---|
| 723 | செவிச்சொல் | - | பிறன் செவியிற் சொல்லுதல் |
| 723 | அயல்நகை | - | பிறன்முகம் நோக்கி நகுதல் |
| 725 | அமையம் | - | சமையம் |
| 726 | விழைபவற்றை | - | விரும்புவனவற்றை |
| 727 | ஐயுறாவகை | - | சந்தேகியாதவாறு |
| 727 | யாங்கணும் | - | எவ்விடத்தும் |
| 731 | கூறு | - | பிரிவு |
| 738 | முதுவர் | - | அறிஞர் |
| 740 | சொல் | - | சொல்லிவைத்த |
| 744 | நன்றுதல் | - | நன்மையடைதல் |
| 747 | உடன்படல் | - | ஒத்துக்கொள்ளுக |
| 751 | நாடுவ | - | விரும்பும் பொருள்கள் |
| 752 | மருவிய | - | பொருந்தியவை |
| 754 | உணா | - | உணவு |
| 759 | அயல் | - | பக்கத்துள்ள. |
| 761 | அமைதல் | - | நிரம்பியிருத்தல் |
| 752 | ஒக்க | - | சரியாக |
| 765 | உறு பசி | - | மிக்க பசி |
| 766 | அரும்பிணி | - | நீங்காதபிணி |
| 766 | செறுபகை | - | அழிவு செய்யும் பகைவர் |
| 767 | சீர் | - | புகழ் |
| 769 | தகை | - | பெருந்தன்மை |
| 767 | மெய்யறிவு | - | கடவுள்ஞானம் |
| 769 | அமைந்து | - | நிரம்பி |
| 770 | அருநிலம் | - | பகைவரைக் கொல்லும் கருவிகள் முதலியவற்றைக் கொண்டுள்ள நிலம் |
| 788 | அகநெறி | - | நிலக்கீழ்வழி. |
| 790 | பொறி | - | கொல்கருவி. |
| 763 | வலப்படை | - | வல்லமையுள்ள படை |

| | | | |
|---|---|---|---|
| 765 | கரவு | | காட்சிக்குப் புலப்படாத படுகுழி முதலியன |
| 817 | நடை | - | ஒழுக்கம் |
| 818 | அலக்கண் | - | துன்பம் |
| 819 | உழந்து | - | வருந்தி. |
| 820 | அழியாது | - | நீங்காது |
| 823 | விளையுள் | - | விளைபொருள் |
| 824 | கிழவர் | - | உடையவர் |
| 824 | காடு | - | அடர்ந்த செடிமுதலியன |
| 846 | மேம்பட | - | மேன்மையுற |
| 851 | படுத்தல் | - | கொல்லுதல் |
| 855 | மெய்யியல் | - | கடவுட்டன்மை |
| 858 | உழல்வர் | - | வருந்துவர் |
| 859 | பிணக்குற்று | - | சண்டையிட்டு |
| 873 | பயப்பொருள் | - | பயன்தரும் பொருள் |
| 857 | எரி | - | தீ |
| 875 | கூர் | - | கூர்மை |
| 884 | மறத்தினர் | - | வீரத்தையுடையவர் |
| 885 | மா | - | யானை |
| 885 | பரி | - | குதிரை |
| 886 | அறைப்படுத்து | - | நிலக்கீழ்வழி செய்து |
| 887 | கலங்கள் | - | கப்பல்கள் |
| 893 | வேதனம் | - | சம்பளம் |
| 894 | சீர் | - | பட்டம் முதலியன |
| 894 | பரிசில் | - | வெகுமதி |
| 894 | கூற்றையும் | - | எமனையும் |
| 897 | ஆற்றல் | - | வல்லமை |
| 897 | இழைத்தது | - | செய்தசபதம் |
| 897 | இகவாது | - | தவறாது |

| | | | |
|---|---|---|---|
| 904 | இடித்துக்கூறல் | - | புத்திகூறல் |
| 905 | புணர்ச்சி | - | சேர்க்கை |
| 905 | பழகுதல் | - | இடைஇடையே கூடல் |
| 905 | உணர்ச்சி | - | ஒரேவித உணர்வு |
| 911 | கிழமை | - | உரிமை |
| 919 | விழையார் | - | பகைவர் |
| 920 | புதுமையில் | - | கண்டமாத்திரத்தில் |
| 921 | ஆகா | - | விலக்கவேண்டிய |
| 929 | உறுவதே | - | தமக்கு வருவதையே |
| 929 | தூக்கும் | - | ஆராயும்; நோக்கும் |
| 925 | ஒல்லும் | - | செய்ய முடியும் |
| 952 | உஞற்றா | - | செய்யாத |
| 930 | நடர் | - | பொய்யர் |
| 937 | தட்பம் | - | குளிர்ச்சி - கருணை |
| 938 | தகல் | - | தகுதி |
| 943 | அறைப | - | சொல்வர் |
| 951 | அடல் | - | வெல்லுதல் |
| 988 | மேவ்வரர் | - | (அரியவற்றைக்) கவர்வார். |
| 969 | மைந்து | - | வலி |
| 969 | தலையழித்தல் | - | நெருங்கியழித்தல் |
| 975 | மாண்டார் | - | மாட்சிமைப்பட்டார். |
| 978 | தூங்காது | - | தாமதியாது |
| 991 | கூகை | - | கோட்டான். |
| 998 | கூம்பும் | - | அடங்கியிருக்கும் |
| 999 | அடர்க்கும் | - | கொல்வளமும். |
| 1002 | முதல்நிலம் | - | குறிஞ்சி |
| 1005 | முரண் | - | வலி |
| 1008 | உறுபகை | - | பெரும்பகைவர் |
| 1011 | ஆற்றா | - | நிகராகா |

| | | | |
|---|---|---|---|
| 1013 | உயின் | - | பிழைப்பின் |
| 1051 | முறை | - | நியாயம் |
| 1032 | அடாது | - | கொல்லாது. |
| 1032 | தலை | - | சிறப்பு |
| 1093 | அடிமுதல் | - | மூலத்னம் |
| 1160 | தகுதி | - | நீதி |
| 1164 | இந்தியம் | - | ஐம்பொறி |
| 1166 | குறளை | - | புறங்கூறல் |
| 1169 | பின்றைநாள் | - | பின்வரும் நாள் |
| 1170 | உற்ற | - | துன்பமடைந்த |
| 1071 | இறை | - | இறைப்பணம் |
| 1071 | இறை | - | அரசன் |
| 1075 | ஓம்பவை | - | காப்பை |
| 1081 | கடிவது | - | களைவது |
| 1086 | நவை | - | குற்றம் |
| 1091 | அறுக்கும் | - | நீக்கும் |
| 1093 | ஆற்றுதல் | - | செய்தல் |
| 1094 | துப்புரவு | - | உணவுமுதலியன |
| 1096 | ஆறு அறிவினர் | - | ஐம்பொறிகளையும் பகுத்தறிவும் கொண்டுள்ள மனிதர். |
| 1103 | அளிப்பவர் | - | இரட்சிப்பவர் |
| 1106 | முகை | - | அரும்பு |
| 1106 | அனர் | - | போன்றவர் |
| 1112 | போன்ம் | - | போலும் |
| 1117 | உகுத்தவர் | - | சிந்தியவர்; விடுத்தவர் |
| 1118 | ஊறு | - | துன்பம் |
| 1123 | கரவினில் | - | மறைவில் |
| 1133 | இயற்கு | - | தன்மைக்கு |
| 1148 | நிரயம் | - | நரகம் |

| | | |
|---|---|---|
| 1146 | கழி | மிக |
| 1159 | ஆடி. | கண்ணாடி. |
| 1160 | அடுதல் | கொல்லுதல் |
| 1170 | உறுத்தும் | வருத்தும் |
| 1178 | சமன் | எமன் |
| 1201 | கரி | சாக்ஷியம் |
| 1211 | அடங்கிய | புலப்படாத |
| 1238 | ஆணவம் | அகங்காரம் |
| 1250 | ஆற்றி | செய்து |

அரும்பதவுரை முற்றிற்று.

* * *

# மெய்யறம்





வ.உ.சி. நூலகம்